CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பிரதோஷ வழிபாட்டு மலர்

இலவச வெளியீடு எண் : 4

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சோம சூத்திர (அப்பிரதக்ஷணம்) பிரதட்சணம்



அம்புக்குறிகள் நாம் முதலில் தொடங்கிச் செல்லும் வழிகளைக் குறிக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

பாத காணிக்கை

ஆ. மூக்கையாத் தேவர் க. மங்களசாமி ரா. ஆறுமுகம்

1986 ஆம் ஆண்டு கீழக்கரை சொக்கநாதர் ஆலயத்தில் மகாகும்பாபிஷேகம் நடந்து முடிந்தபின் இச்சிவாலயத்திலும் பிரதோஷ வழிபாடு நடைபெற வேண்டுமென்ற பேராவலினால் 29.11.1986 ல் ஏர்வாடியில் இப்பிரதோஷ வழிபாட்டுக் குழுவினை அமைத்து இன்றுவரை அக்குழு ஆல்போல் வளர்ந்து சிறப்பாக நடந்துகொண்டிருக்க மூலகாரணமாயுள்ள சிலரில் “ வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்னும் திருக்குறளுக்கு இலக்கணமாய்த் திகழும் அமரர்களான சொக்கானை Ex. கர்ணம், தலைவர். தெய்வத்திரு. ஆ. மூக்கையாத் தேவர் அவர்களுக்கும், ஏர்வாடி சமூகத்தலைவர் தெய்வத்திரு. க. மங்களசாமிக் கோனார் ஏர்வாடி சமூக நலத்தொண்டர் தெய்வத்திரு. ரா. ஆறுமுகம் போஸ்ட்டு மாஸ்டர் அவர்களுக்கும் இப்பிரதோஷ மலரை அன்னார்களின் காலடியில் காணிக்கையாக்கி எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இவண்

என்றும் சிவத்தொண்டில் தங்களன்பன்,

சிவத்திரு. த. குணசேகரன் தலைவர்,

பிரதோஷ வழிபாட்டுக் குழு,

ஏர்வாடி - கீழக்கரை.

6 - 1 - 2003.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருள் ஆசி உரை

ஸ்ரீ ரவீந்திர சுவாமிகள் M.A.
தர்க்க வேதாந்த வித்வான்
நகரத்தார் உபதேச குருபீடம்.
பாதரக்குடி - 623 307.

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி" என்ற படி இந்த உயிர் பரிணாம வளர்ச்சியில் ஓரறிவு, ஈரறிவு என்று வளர்ச்சியடைந்து பகுத்தறிவுடன் கூடிய மனித பிறவியை அடைந்துள்ளது. பிற உயிரினங்களைப் போல உண்ணுவது , உறங்குவது, இனவிருத்தி செய்வது இதுதான் வாழ்வின் பயன் என்றால் அதற்குப் பகுத்தறிவு தேவையேயில்லை. நாம் எங்கிருந்து வந்தோம், எங்கு செல்ல வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்பதையெல்லாம் சிந்தித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, இறைவனை வணங்கி வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலையை அடைதலே மனித வாழ்வின் பயனாகும். இது அநேகமாக அடியார்கள் அனைவரும் அறிந்ததேயாயினும் கலியுகத்தின் மகிமையால் உலகியல் கடமைகளுக்கே நேரம் போதாமல் தவிக்கும் நிலையில் தினந்தோறும் வழிபாடுகள் செய்வது என்பது எல்லோருக்கும் சாத்தியமல்ல. இக்குறையைப் போக்குவதற்காகச் சிறப்பு வழிபாடுகளை நமது முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளனர். அத்தகைய சிவ வழிபாடுகளில் பிரதோஷ விரத வழிபாடு மிகவும் சிறப்புடையதாகும்.

தாய் தந்தையரை இழந்த தர்மகுப்தன் என்ற விதர்ப்பநாட்டு இளவரசன் ஒரு ஏழை அந்தணப் பெண்மணியால் வளர்க்கப்பட்டான். அவளுடைய மகனான பிரம்ம குப்தனும் இவனும் பிச்சையெடுத்து உண்டு வந்தனர். ஒரு நாள் அவர்கள் சிவன் கோவிலுக்குச் சென்ற பொழுது ரிஷப முனிவர் என்பவர் தர்ம குப்தனை பார்த்து சிரித்தார். அதனை கண்ட அந்தணப் பெண் முனிவரை வணங்கி ரிஷப முனிவரின் சிரிப்பிற்குக் காரணம் யாதெனக் கேட்டாள்.

அதற்கு அம்மாமுனி, முற்பிறப்பில் பாண்டியமன்னனாக இருந்த இவன் சிவ தருமங்களைக் கைவிட்ட காரணத்தால் இப்பிறவியில் அரண்மனையில் பிறந்தும் அச்சுகபோகங்களை அனுபவிக்க முடியாமல் பிச்சையெடுத்து வாழ்கின்றானே அதை நினைத்துச் சிரித்தேன் என்றார்.

அதைக் கேட்ட அத்தாய், இவன் மீண்டும் நன்மையடைவதற்குரிய வழியையும் தாங்களே கூற வேண்டும் எனப் பணிந்து நின்றாள். அதற்கு அம்மாமுனிவர் பிரதோஷ விரதமிருந்தால் இழந்த செல்வத்தையும் பதவியையும் இவன் மீண்டும் பெறுவான் என்று கூறினார்.

அதன்படி இரண்டு சிறுவர்களும் பிரதோஷ விரதமிருந்து சிவவழிபாடு செய்துவரும் நாளில் ஒருநாள் பிரமகுப்தனுக்கு ஆற்றங்கரையில் புதையல் கிடைத்தது. இன்னொருநாள் இருவரும் காட்டுக்குச் சென்றபொழுது தரும குப்தன் அம்சுமதி என்ற கந்தர்வப் பெண்ணைச் சந்தித்தான். இருவரும் காதல் கொண்டனர். அவளுடைய தந்தை மகளின் விருப்பத்திற்கிணங்கி சிவபெருமானிடம் விண்ணப்பிக்க சிவபெருமான் அனுக்கிரகிக்கவே அம்சுமதிக்கும் தர்மகுப்தனுக்கும் திருமணம் விமரிசையாக நடந்தது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கந்தர்வனின் படை உதவியுடன் தருமகுப்தன் பகைவனை வென்று தனது ராச்சியத்தையடைந்து சிறப்பாக ஆட்சி செய்தான். சிவாலயங்களையும் நிறுவினான் என்று ஸ்காந்த மகாபுராணம் கூறுகிறது. எனவே பிரதோஷ விரதத்தால் இம்மையில் நன்மை விரைவில் கிடைக்கும் என்பது தெளிவாகிறது.

எனவே பிரதோஷத்தன்று விரதமிருந்து எம்பெருமான் திருவருளுக்குப் பாத்திரமாகி இம்மையிலும் மறுமையிலும் நிலையான பேரின்பத்தை அடைய வேண்டும். "நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்" என்ற சிவவாக்கியார் போன்ற ஞானியரின் வாக்குகள் சுயநலமும் அறியாமையும் நிறைந்த சாதாரண அன்பர்களுக்கு சரி வராது பக்தி மார்க்கமே அவர்களுக்கு உதவக்கூடியது என்பதை தொகுப்பாசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

சுலோகங்களும் தேவார, திருவாசகப் பாடல்களும் நன்கு தொகுக்கப்பட்டுள்ளன. எனவே அனைவரும் இதனை நன்கு படித்து விரதத்தை நன்கு கடைப்பிடித்து இறைவன் திருவருளுக்குப் பாத்திரமாக வேண்டுமாய்க் கோருகிறோம். பிரதோஷ வழிபாட்டுக் குழுவினரின் திருப்பணி மேன்மேலும் சிறந்து விளங்க வேண்டும். எல்லோரும் இறைவனின் திருவருளுக்குப் பாத்திரமாக வேண்டுமென்று எல்லாம் வல்ல எம்பெருமானை வேண்டி நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

அணிந்துரை

எம்பெருமான் சிவன் ஆலகாலவிஷத்தை உண்டு அனைத்துயிர்களையும் காப்பாற்றியதோடு தேவர்களின் ஆணவத்தையும் ஒடுக்கி, "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்ற உண்மையையும் உணரச் செய்தார்.

பிரதோஷ வேளையில் பிரமாவும், திருமாலும் பிற தெய்வங்களும் தங்கள் துன்பம் நீங்க சிவதரிசனம் காண சிவசந்நிதியில் ஐக்கியமாகி விடுவதால் நாமும் பிரதோஷ வேளையில் விரதமிருந்து சிவசந்நிதியில் நின்று சிவநாமத்தை உச்சரித்து நாமும் இவ்வுலகமும் உய்ய வழிபடுதல் வேண்டும். இன்னல் பல நீங்கி இன்புடன் வாழ இறைவனை வழிபடுதல் ஒன்றே நல்வழியாகும்.

திரு. கணேசன் ஓய்வு பெற்ற தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர். இவர் இறை வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவர் கீழக்கரையிலுள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் அன்பர்கள் பலரின் உதவியோடு திருப்பணிகள் பலவற்றைச் சிறப்புறச் செய்துள்ளார்கள். ஊர்மக்கள் அனைவரும் நலம் பெற வேண்டும் என்பதற்காக தன்னை இச்சிவத்தொண்டில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மக்கள் எல்லோரும் இப்பிரதோஷ மகிமையை அறிந்து சிவசந்நிதியில் கூடி சிவபெருமானையும் நந்திதேவரையும் வணங்குதல் அனைவருக்கும் நலத்தினையும், வளத்தினையும் வழங்கும் என்பதனை தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். அத்துடன் குமரகுரு சுவாமிகள் அருளிய சகலகலா வல்லி மாலையையும் மாணவர்கள் மனனம் செய்து வழிபட்டு கல்வியில் சிறக்க வேண்டும் என்ற நல்நோக்கில் தந்திருக்கிறார்கள்.

இதனை அனைவரும் படித்து பிரதோஷ கால விரதம் இருந்து சிவனையும் நந்தீஸ்வரரையும் வணங்கி வழிபட்டு மக்கள் தங்களுக்குள் எந்த வேறுபாடும் இன்றி ஒவ்வொருவரையும் அன்புடன் நேசித்து அரிய நலன்கள் பல பெற்று இவ்வுலகில் சிறப்புடன் வாழ வேண்டும் எனவும், மாணவர்கள் குமரகுருசுவாமிகள் அருளியிருக்கும் சகலகலாவல்லி மாலையினை மனனம் செய்து இறைவனை வழிபட்டு கல்வியில் சிறக்க வேண்டும் எனவும் மனம் உவந்து எல்லாம்வல்ல இறைவனை வழிபட்டு, வேண்டிக்கொள்ளுகிறேன்.

இத்தெய்வப் பணியினை மக்கள் நலம் கருதி அயராது செய்துவரும் திரு. கணேசன் அவர்களின் தொண்டு தொடர்ந்து நடைபெற வேண்டும் எனவும், இப்பிரதோஷ வழிபாடு தொடர்ந்து சிறப்புடன் நடக்கவும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டிக் கொள்ளுகிறேன்.

திரு. கணேசன் தொகுத்துள்ள இந்நன்னூலுக்கு அணிந்துரை வழங்குவதை சிறந்த கௌரவமாகக் கருதுகிறேன்.



பேராசிரியர் **மு. அண்ணாமலை**, முதல்வர்.
முகமது சதக் பொறியியல் கல்லூரி
கீழக்கரை.

வாழ்த்தி மகிழ்கின்றேன்

ஆலயங்களில் 1,2,4,6,8 என்ற முறைகளில் பூஜைகள் தினம்தினம் நடந்து வருகின்றன. அதைக் காட்டிலும் மாதம் இருமுறைவரும் பிரதோஷ பூஜை மிகச் சிறப்பானதாகும். பிரதோஷ காலத்தில் நந்தி தேவருக்கும் சிவனுக்கும் குறுக்கே செல்லக்கூடாது. [அர்ச்சகர் மட்டும் விதிவிலக்கு] இந்த பிரதோஷ காலத்தில் பங்கு கொண்டு அபிஷேகப் பொருள்கள் மற்றும் வில்வம், குட்டி விளா இலை, வன்னி இலை, எண்ணெய், சூடம், நல்லசாம்பிராணி இவைகளைச் சமர்ப்பணம் செய்வதால் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு புண்ணிய பலன் உண்டு.

அப்பலன்கள் தேக சுகம், ரத்த விருத்தி உண்டாவதுடன் கண், காது நோய்கள் நீங்கும். புத்திரப்ராப்தி, விவாகம் உண்டாகும். முன் ஜென்ம பாவம் போகும். இறைவனை மனம், வாக்கு, காயமென்னும் திரிகரண சுத்தியுடன் வழிபடுவோமாகில் நிச்சயம் பலனுண்டு. பிரதோஷ காலத்தில் தேவார திருவாசகப் பாடல்களைத் தவிர பிற பாடல்கள் வேண்டியதில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நந்தியின் பின்புறம் நின்று இரு கொம்புகளுக்கிடையே இறைவனைத் தரிசிக்கும் பொழுது "ஓம் ஹர" என்ற விசேட மந்திரம் மற்றும் "நமசிவாய" என்னும் பஞ்சாட்சரமந்திரம் இவைகளை மனதிற்குள் சொல்லிக்கொண்டு நந்தியின் பின்புறத்தைத் தொட்டுக் கொண்டு இறைவனை வழிபட வேண்டும் என்று சிவபெருமானின் ஈசான, தத்புருஷ, அகோர, சத்யோஜாத, வாமதேவ என்னும் ஐந்து முகத்தினின்றும் தோன்றப் பெற்ற சிவாகமங்கள் தெளிவுபடக் கூறுகின்றன. 1000 வருடங்கள் தவம் செய்து ஈசனை அடைந்தவர் நந்தி தேவர். பிரதோஷ காலத்தில் கட்டாயம் ஒவ்வொருவரும் விபூதி பூசிக் கொண்டிருக்க வேண்டும். விபூதியை ஒருவிரலால் பூசாமல் மூன்று விரல்களால் பூச வேண்டும். விபூதி பூசியவரைக் கேலி செய்தல் கூடாது அவ்வாறு செய்வது சிவனை நிந்திப்பதற்கு ஒப்பாகும்.

ஆன்மீக அன்பர்கள் அனைவரும் பிரதோஷ வழிபாட்டில் பங்குகொண்டு அங்கயற்கண்ணி உடனமர் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் அருளுக்குப் பாத்திரமாகி பேரானந்தப் பெருவாழ்வு வாழ வேணுமாய் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் திருவடித் தாமரைதனில் நன்றி மலரைக் குவித்து வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இப்படிக்கு
சர்வசாதகம் சிவதிரு. ஆ. தேவேந்திர சிவாச்சாரியார்
கீழக்கரை ஸ்ரீ சொக்கநாதர் கோவில்
பரம்பரை டிரஸ்டி.

வாழ்த்துரை

திருச்சிற்றம்பலம்

கிருதா யுகத்தில் தவமும், திரேதா யுகத்தில் ஜெபமும், துவாபர யுகத்தில் யாகமும், கலியுகத்தில் வழிபாடும் மனிதன் மேனிலையடையச் சிறந்த வழிகள் என மகாபாரதத்தில் சாந்திபர்வதத்தில் கூறப்பட்டுள்ளதற்கிணங்க எல்லோரும் சிவ வழிபாடு செய்தல் சிறந்தது.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் அப்பர் சுவாமிகளின் திருவாக்கிற்கு ஒப்ப பெருநோக்கோடு எல்லோரும் சிவ வழிபாடு செய்து பயன் பெறும் வண்ணம் பிரதோஷ பூஜாமலர் என்னும் இப்புத்தகத்தைத் தொகுத்தளித்த பிரதோஷ வழிபாட்டுக் குழு அமைப்பாளர் சிவத்திரு காசி. S.R.S. கணேசன் ஆசிரியர் அவர்களுக்கும் இப்புத்தகத்தை இலவச வெளியீடாக அளித்துதவிய ஏர்வாடி – கீழக்கரை பிரதோஷ வழிபாட்டுக் குழுவினருக்கும் ஏனைய ஆன்மீக அன்பர்கள் அனைவருக்கும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் என்றும் நல்லருள் புரியப் பிரார்த்தித்து நாடும் வீடும் நலம் பெறவும் உலகத்தில் அமைதியும் உள்ளத்தில் மகிழ்ச்சியும் உண்டாக வாழ்த்துகின்றேன்.

தங்கள் அன்புள்ள
சிவத்திரு. மு.வ. கிருஷ்ணமூர்த்தி ஐயர்
பூஜகர்
அருள்மிகு சொக்கநாதர் திருக்கோயில்
கீழக்கரை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நன்றி மலர் குவிக்கின்றோம்.

" சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமசிவாயவே!"

என்னும் அப்பர் சுவாமிகளின் கூற்றின்படி இப்பிறவிக்கு உற்ற துணையாக நமக்கு உதவுவது சிவ வழிபாடு. அவ்வழிபாட்டில் மிகச் சிறந்தது பிரதோஷ வழிபாடு. பிரதோஷ வழிபாடு என்பது என்ன? அதன் பயன் என்ன? என்பதை விளக்கும் இத்தொகுப்பு நூலுக்கு மனமுவந்து அருளாசியுரை வழங்கிய காரைக்குடி அருகிலுள்ள பாதரக்குடியில் வாழும் நகரத்தார் உபதேச குரு பீடாதிபதி தர்க்க வேதாந்த வித்துவான் தவத்திரு. ரவீந்திரசுவாமிகள் அவர்களுக்கு எங்கள் நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்குகின்றோம்.

எங்களின் வேண்டுதற்கிணங்கி இப்பிரதோஷ பூஜா மலருக்கு அணிந்துரை வழங்கிய கீழக்கரை முகமது சதக் பொறியியற் கல்லூரி முதல்வர் பேராசிரியர் சிவத்திரு. மு. அண்ணாமலை அவர்கட்கும் எங்களின் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எங்களை நல்ல உள்ளத்தோடு வாழ்த்தி மகிழும் கீழக்கரை சொக்கநாதர் திருக்கோவில் பரம்பரை டிரஸ்டி சர்வசாதகம் சிவத்திரு. M. தேவேந்திர சிவாச்சார்யர் அவர்களுக்கும் வாழ்துரை நல்கிய கீழக்கரை அருள்மிகு சொக்கநாதர் திருக்கோவில் பூஜகர் சிவசித்தர் திரு. மு.வ. கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்களுக்கும் எங்கள் நன்றியினை உரித்தாக்குவதோடு, பிரதோஷ பூஜையின் மகிமை சரிவரத் தெரியாத காலத்தில் 1988-ல் முதன் முதலில் பிரதோஷ பூஜா பலன் என்னும் புத்தகத்தை இலவச வெளியீடாக அளித்துதவியும் ; இன்றுவரை வழிபாடு சிறக்க ஆக்கமும் ஊக்கமும் அளித்து சிறுசிறு வழிபாட்டு அட்டைகளை அடித்து உதவிவரும் கீழக்கரை சுப்பையா அடிமை சிவத்திரு. தங்கம் ராதா கிருஷ்ணன் அவர்களுக்கும் 1991 ஆம் ஆண்டு பிரதோஷ பூஜாபலன் புத்தகத்தை இலவச வெளியீடாக அளித்துதவிய மதுரை M.M. பிளாஸ்டிக் உரிமையாளர் சிவத்திரு. M. முருகானந்தம் B.A. அவர்களுக்கும் , 1995-ம் ஆண்டு இம்மலரை இலவச வெளியீடாக அளித்து உதவிய பிரதோஷ மகிமையைப் பரவச் செய்த சூப்பர் எலக்ட்ரானிக் உரிமையாளர் உசிலை சிவத்திரு. சரவணன் அவர்களுக்கும் ஆரம்ப காலத்தில் சிவபுராணம், சண்முக கவசம் போன்ற சிறுசிறு நூல்களை இலவசமாக வெளியிட்டுதவிய இக்குழுவைச் சேர்ந்த சிவத்திரு. ஏனாதி. முத்துச்செல்லம் மெக்கானிக் அவர்களுக்கும் ஏனாதி. மா. கணபதி L.I.C ஏஜண்ட் அவர்களுக்கும் வருடந்தோறும் பிரதோஷ விரத அட்டயை அடித்து இலவசமாக அளித்துவரும் கீழக்கரை சிவத்திரு. வீர. முருகன் ஆசிரியர் அவர்களுக்கும் எங்கள் மனம் கனிந்த நன்றியை உரித்தாக்குவதுடன் எல்லாருக்கும் எல்லாம் வல்ல பிரதோஷ நாயகன் நல்லருள் புரியப் பிரார்த்திக்கின்றோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

" எம்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் கடமை உணர்வோடு எல்லாருடைய உள்ளங்களிலும் அன்பும் அருளும் பெருகிச் சாந்தமுண்டாகவும், மனிதநேயம் வளர்ந்து உலகில் அமைதியும் சகோதர உணர்வும் நிலைக்க இறைவழிபாடு இன்றியமையாதது என்பதை உணர்த்தவே இம்மலரை இலவசமாக பக்தர்களுக்கு வழங்குவதில் பிரதோஷ வழிபாட்டுக் குழுவினராகிய நாங்கள் பெருமகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றோம்.

இவண்
நன்றியுள்ள பிரதோஷ வழிபாட்டுக்
குழுவினர்.
ஏர்வாடி – கீழக்கரை.

முன் உரை

ஓம் நவசிவாய! திருச்சிற்றம்பலம்!

" அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவையின் அமுதவாக்கு. தாயும் தந்தையுமே நாம் முதலில் அறிந்து வணங்கத்தக்க தெய்வங்களாகும். கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது மிகவும் சிறப்புடையதாகும் என்பதே இதன் கருத்தாகும்.

நாம் அபாயமின்றி வாழும் உபாயம் எது?

வேகமாகச் சுழலும் இப்பூலகில் வாழும் நாம் பொருளோடும் புகழோடும் வாழ பலவழிகளைப் பின்பற்றிப் பாடுபடுகிறோம். அவ்வாறு உழைத்துப் பெற்ற பொருளைக் கொண்டு அமைதியோடும் அன்போடும் வாழ நம்மில் பலர் அறிந்திலோம். இவ்வுலக வாழ்வில் நாம் இன்பமுற நம் மூதாதையர்கள் கூறும் அருள் நெறிகள் சிந்திக்கத் தக்கன. எத்தொழிலைச் செய்தாலும் ஏதவதைப் பட்டாலும் நம் சித்தத்தில் சிவ நாமம் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். அவனது திருவடியை நம் சிந்தையில் பற்றி நிற்க வேண்டும். "சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை" என்பது அவ்வையின் அமுதவாக்கு.

மனக்கவலையின்றி வாழ மருந்துண்டா? நாம் எத்தனையோ தியான மார்க்கங்களைப் பின்பற்றி மனதைச் சமநிலைப்படுத்த முயன்றாலும் நம் விதி வழி வரும் இன்ப துன்பங்கள் நம் இதயத்தைத் தாக்கும் பொழுது நம் உள்ளம் அழுகின்றதே! அதனை மாற்ற வழி என்ன எனச் சிந்தித்தால் இப்பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடப்பதற்கும் நம் மனக்கவலைகளை மாற்றி இன்பம் பெறுவதற்கும் தனக்கு ஒப்பாகும் மிக்காரும் இல்லாதவனாகிய பரம்பொருளின் திருவடியைப் பற்றி நிற்பதே வழியல்லாமல் வேறில்லை என்பதை "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றலரிது". என்னும் திருக்குறளால் அறியலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இறையருளைப் பெறும் எளிய வழி யாது? எப்பொழுதும் சிவ நாமத்தைச் சிந்தையிற் கொண்டு வாழ்ந்த போழ்தினும் அவனது முழு அருளைப் பெறும் காலமறிந்து இடமறிந்து பக்தி செய்தல் வேண்டும் என்பதைக் கீழ்வரும் திருக்குறள் தெளிவாக்கும். "ஞாலம் கருதினும் கை கூடும் காலம் கருதி இடத்தாற் செயின்". சிவனருளை முழுமையாக எளிதில் பெறுவதற்கு ஏற்றகாலம் பிரதோஷ காலமும் சிவாலயங்களில் நடைபெறும் பிரதோஷ பூஜையுமே ஆகும். சிவாலயங்களில் நம்மாலியன்ற பணிகளைச் செய்வதும் பக்திப்பாடல்களைப் பாடுவதும் பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்டு நம் சித்தத்தைச் செம்மைப் படுத்துவதும் சிறப்பாகும்.

நாம் நல்லவர்களாய் வாழ்ந்தும் துன்பம் ஏற்படக்காரணமென்ன?

இப்பிறவியில் நாம் பெறும் இன்பதுன்பங்களுக்கு நாம் முற்பிறப்பில் செய்த புண்ணிய பாவங்களே காரணம் என்னும் உண்மையறியாது நம்மில் பலர் துன்புறும் போதெல்லாம் இது என் தலைவிதி என்றும் இறைவனுக்குக் கூட கண்ணில்லையே என்றும் புலம்பி துாஷித்தும் துக்கித்தும் இருப்பதை நாம் காண்கின்றோம்.

பிறர்க்கு உதவ வேண்டும் என்பதை ஒரு பொருட்டாக எண்ணாது தன்னலமே பெரிதாகக் கொண்டு வாழுகின்றோம். உலையில் அரிசியிடாமல் பானையில் சோறுவராது என்ற உண்மையை உவமையாக்கி ஔவையார் கூறும் அருங்கருத்து சிந்திக்கத் தக்கது.

"செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தாக்கால்
எய்தவருமோ இரு நிதியம் — வையத்து
அரும்பாவமென்று அன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்.

இப்பிறவியில் வறுமை ஏற்படக் காரணம் என்ன?

முற்பிறப்பில் சிவனைப் போற்றித் துதியாதவர் இப்பிறப்பில் சோறில்லாமலும் சுகவாழ்வில்லாமலும் சுற்றத் துணியில்லாமலும் பிச்சை புகினும் பெறாமலும் வருந்துவர் என்பதை பட்டினத்தடிகள் கீழ்வரும் பாடலில் சுட்டுவதை உணரலாம்.

"ஆற்றோடு தும்பை அணிதோடும் அம்பலவாணர்தமை
போற்றாதவர்க்கிங் கடையாள முண்டு இப்பூதலத்தில்
சோற்றாவியற்றுச் சுகமாற்றுச் சுற்றத் துணியுமற்று
ஏற்றாலும் பிச்சை கிடையாமல் ஏக்கற்றிருப்பர்களே",

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வள்ளுவப் பெருந்தகையும் " இலர் பலர் ஆகிய காரணம் நோற்பர் சிலர் பலர் நோவாதவர்". என்னும் குறளில் பலர் வறுமையுற்றுத் துன்புறுவதற்கும் சிலர் சீரோடும் சிறப்போடும் வாழ்வதற்கும் காரணம் இறைவனைச் சிந்தித்து நோன்பிருந்தவர் சிலர், அவ்வாறு செய்யாதவர் பலர் எனக் கூறுகின்றார். ஆகவே பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நாம் சிவனை நினையாது வாழ்தல் சிறப்பாகுமா?

வங்கியில் பணம் போட்டு வைத்திருந்தால் உரியவருக்கு வட்டி தேடிவரும். வங்கியில் கடன் வாங்கியிருந்தால் வட்டிகட்டும்படி வாங்கியவருக்கு தாக்கீதுதான் வரும். அவனுக்கு மட்டும் பணம் வருகிறதே எனக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே, மேலும் கைப்பணமும் கரைகிறதே கடவுளே ! இது என்ன கொடுமை எனக் கலங்குவதில் பயன் என்ன?

என் பாவத்தைப் போக்கி இறையருளைப் பெறுவது எவ்வாறு? பொருளற்ற நான் புண்ணியம் பெற வழியேது? என வினவுவார்க்கு திருமூலர் விடை கூறுகின்றார்.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்
எண்ணிலிபாவிகாள் எம்மிறை ஈசனை
நன்னறியாமல் நழுவுகின்றாரே".

பூவுக்கும் நீருக்கும் மனமிளகி எம்பெருமான் அருள்புரியக் காத்திருக்கையில் அதை நன்கு அறியாமல் நழுவ நினைப்பது நம் குற்றம்தானே. "சிவசிவ என்றிடத் தீவினைமாளும்" என்ற பாடலால் சிவசிவ என்று சொல்வதன் மூலமும் சிவபூஜை செய்வதன் மூலமும் நம் தீவினைகள் தீர்வது மட்டுமின்றி, நம் சிந்தை தெளிவு பெற்று மனிதன் தேவர்களைப் போன்று சாவா மூவா நிலைபெற்றுத் தெய்வமாகலாம் என்பது திருமூலரின் தெளிந்த கருத்தாகும்.

எப்படிப்பட்ட வழிபாடு சிறந்தது?

சிவசிவ என்று கூறுவதை மேலோட்டமாகக் கூறாமல் உண்மையான அன்போடு உள்ளம் உருகிக் கூறினால் நன்னெறி பெறலாம் என்பதை திருஞானசம்பந்தர் தமது தேவாரப் பாடலில் தெளிவாக்குகின்றார்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே".

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உள்ளன்பில்லாத போலியான வெறும் இறைவழிபாடு நம்மை உய்விக்க உதவாது அவ்வாறு அன்பில்லாதவர் செய்யும் ஆரவார பூஜைக் கண்டு இறைவன் எள்ளி நகை புரிவானே யல்லாது ஏமாந்து அருள்புரியமாட்டான் என்பதை வாகீசராகிய அப்பரடிகள்

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்குமிக்கும் பொன்னார் சடை மேனியன்
பொக்குமிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தமை நாணியே". என்று உள்ளன்

பில்லாதவர் பூஜை பயனற்றதென்பதை நயம்படக் கூறுகின்றார். "அருளெனும் அன்பீன் குழவி" என்னும் குறட்பாவில் அன்புதான் அருளைப் பெற்றுத்தரும் தாய் என்பதை வள்ளுவப் பெருந்தகையும் எடுத்துரைக்கின்றார்.

கோவிலுக்குச் சென்றுதான் வழிபட வேண்டுமா? எனும் இக்கேள்விக்கு " ஆம்" என்கிறார் வாரியார் சுவாமிகள். "பசுவின் உடல் முழுவதும் பால் ஆகும் குருதி பரவியிருந்தாலும் அது மடுவிலே மட்டும்தான் பாலாகச் சுரக்கிறது. அதுபோல இறைவன் உலகெங்கும் எல்லாவுயிர்களிலும் கலந்திருந்தாலும் கோவிலில்தான் அருள் சுரந்து நிற்கின்றான்" என்பதை இவ்வுவமையின் மூலம் விளக்குகின்றார்.

"நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புஸ்பம் சாத்தியே
சுற்றிவந்து மொனமொனன்று சொல்லுமந்திரமேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சத்துவம் கறிச்சுவை யறியுமோ" . என்னும்

சிவவாக்கியார் பாடலைப் படித்த சிலர் மேலோட்டமாகப் பொருள் கொண்டு, நம்மில் சிலர் கோவிலுக்குச் செல்வதும் பூஜையிற் கலந்து கொள்வதும் வீண்வேலையென்று கூறி நகைக்கின்றனர்.

வடலூர் வள்ளாளர் இராமலிங்க சுவாமிகள் கூறுவது போல "எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணியுள்ளே ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்யாவர்". அவர் உள்ளத்தில்லவா இறைவன் அருள் சுரந்து நிற்கின்றான். எல்லா உயிர்களிடத்தும் இறைவன் உட்கலந்துள்ளான் என்பதை உணர்ந்து அன்பு கொண்டொழுகும் உத்தம நிலைபெற்றவர்கட்கல்லவா நட்டுவைத்த கல்லும் மந்திரச் சொல்லும் தேவையற்றதாக ஆக முடியும். நம்மைப்போன்று தன்னலமே பெரிதாகப் பேணும் சாமானியர்களுக்கு பிரார்த்தனையும் பூஜையுமல்லவா முதற்படியாக அமைகின்றது. நாமும் நம் சித்தர்களைப் போன்று உத்தம நிலைபெற கீழ்வரும் திருமூலர் பாடல் நல்வழி காட்டுவதாக அமைந்துள்ளது.

"நாடும் நகரமும் நற்றிருக்கோயிலும்
தேடித்திரிந்து சிவசிவா வென்று
பாடுமின் பாடிப்பணிமின்! பணிந்தபின்
கூடிய நெஞ்சத்தைக் கோயிலாய்க் கொள்வனே".

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இறைவன் நம் நெஞ்சத்தைக் கோயிலாய்க் கொள்ளும் அந்தப் பக்குவம் வரும்வரை, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் சிந்தைபெறும் வரை திருக்கோவில்களைத் தேடித்திரிந்து சிவசிவா என்று பாடித் தொழுவது நம் பணியல்லவா? ஏன் சிவனை வணங்க வேண்டும்? கல்விக்குக் கணேசன், வெற்றிக்கு வேல்முருகன், செல்வத்திற்குத் திருமகள், வீரத்திற்கு ஆஞ்சநேயர் என ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தெய்வங்கள் இருந்தாலும் நம் பாவத்தை நீக்கி ஒட்டு மொத்தமான நன்மையைக் கொடுப்பவர் சிவபிரான்தான். ஆகவேதான் சிவனுக்கு அழித்தல் (பாவங்களை) கடவுள் என்று கூறுகின்றோம். ஆகவேதான் ஒவ்வொரு தெய்வங்களின் அவதார முடிவிலும் அவர்கள் சிவபூஜை செய்து தங்கள் பாவத்தைப் போக்கிக் கொண்டதாக தலபுராணங்கள் கூறுகின்றன. வள்ளுவப் பெருந்தகை கூறுவது போன்று நம் தீச்செயல்கள் குறைந்தாலே நாம் புண்ணியம் பண்ணியவர்களாவோம். அப்படித் தீவினைகள் குறைவதற்கு நாம் விரும்பிச் சொல்ல வேண்டிய சொல் அன்பே வடிவாகிய "சிவசிவ" என்னும் இனிய சொல்லேயாகும். "அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்". எனவே நாம் நம் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தரும் சொல்லாகிய "நமசிவாய" என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை எப்பொழுதும் சிந்தையிற் கொண்டு சிவ வழிபாடு செய்தல் வேண்டும்.

கூட்டுப் பிரார்த்தனையின் பயன் என்ன?

பலசிறிய நார்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு பெரும் வடமாகி ஒரு பெரிய தேரையே இழுக்க உதவுவது போல கூட்டுப் பிரார்த்தனை இறையருளைப் பெற எளிய வழியாக அமைகின்றது. காகம்கூட தன் உணவை தன் உறவோடு கலந்து உண்ணுவதைக் கண்டும், பூரணமாய்ப் பொங்கித் ததும்பும் சிவபோகத்தை சேர்ந்து புசியாதிருக்கலாமா? சிவனருளால் பெற்ற இத்தேசம் செத்துவிழுமுன் சிவபோகத்தைப் புசிப்பதற்குச் சேர்ந்து வாருங்கள் என்று தாயுமானசுவாமிகள் கூட்டு வழிபாடு செய்ய உலகோரைக் கூவி அழைப்பது நம் உள்ளத்தை உருக்குவதாக உள்ளது.

நாம் இறைவனை வழிபடும்போதெல்லாம் நம் உடலிலிருந்து காந்தசக்தி வெளிப்படுவதாக அறிவியலார் கூறுகின்றனர். பலர்கூடி ஓரிடத்தில் வழிபடும் பொழுது அச்சக்தி பன்மடங்கு பெருகி இறையருளை நம்பால் ஈர்க்க உதவுகின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டகாரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிட நாம் இனியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர்ந்துவாரும் ஜெகத்தீரே
- தாயுமானசுவாமி

சிவபெருமான் நமக்காகவே நஞ்சுண்டார். சிவ வழிபாடு செய்வதற்குரிய காலம் கடந்துவிடவில்லை. திருமால், பிரம்மா மற்றும் முப்பத்து முக்கோடி தேவர்கள் முன்பாக இவ்வுலக உயிர்கள் பிழைத்துய்ய சிவபெருமான் நஞ்சுண்டார். அப்படிப்பட்ட ஆலால சுந்தரன் தன்னடியவர்க்காக அருள் வழங்கக் காத்திருக்கையில் இனியும் காலம் தாழ்த்தாது சிவாலயம் சென்று "சிவசிவா" என்று பாடிப் பணிய முயலவேண்டாமா?

"கால முண்டாகவே காதல் செய்துய்மின் கருதரிய
ஞால முண்டானொடு நான்முகன் வானவர் நன்னறிய
ஆலமுண்டா னெங்கள் பாண்டிப் பிரான் தன்னடியவர்க்காய்
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே" என்பது

திருவாசகம். அமிழ்தமுண்ட ஆணவத்தால் சிவனை வணங்கத் தவறிய தேவர்களுக்கு பிரதோஷ வழிபாட்டால் தீங்கெல்லாம் தீர்ந்த தென்றல், பட்டினத்தடிகள் வேண்டுவது போன்று

"கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின்னஞ்செழுத்தை
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே" என்று

நாமும் நம் பிழைகளைப் பொறுத்தருளப் பிரார்த்தித்தால் நம் தீவினைகளும் தீர்ந்து நலம் சேருமல்லவா?

நாம் அறியாமல் செய்யும் தீவினைகள் பிரதோஷ வழிபாட்டாலும் பக்தி நெறிகளைக் கேட்பதாலும் படிப்பதாலும் சாதுக்களைத் தரிசிப்பதாலும் குறைவுபடும். பிரதோஷ காலத்தில் நாம் செய்யும் நற்கருமங்கள் பல மடங்காகப் பெருகி நமக்குச் சேமிப்பு நிதியாகி நற்பலனளிக்கும் என்பதை நன்குணர்ந்து பிரதோஷ வழிபாட்டில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதே எங்களின் பேராவல்.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்னும் தாயுமான சுவாமிகளின் பாடலைக் கருத்திற்கொண்டு பல புத்தகங்களைப் படித்தும் பல பண்டிதர்களை அணுகியும் பிரதோஷம் பற்றிய திரண்ட கருத்தினை புத்தகமாகத் தொகுத்துள்ளேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இப்புத்தகத்தைப் படிக்கும் அன்பர்கள் பிறரையும் படிக்கச் செய்து, பிரதோக்ஷ வழிபாட்டிற்கு அழைத்துச் செல்வதுடன், இப்புத்தகத்தில் ஏதேனும் பிழைகாணின் தயவு செய்து சுட்டிக்காட்டி விளக்கும்படி பணிவோடு வேண்டுகிறேன்.

"யாவர்க்குமாம் இறைவர்க் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுரை
யாவர்க்குமாம் உன்னும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே!"

- திருமூலநாயனார்.

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தெங்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தங்கடனடியேனையும் தாங்குதல்
எங்கடன் பணி செய்து கிடப்பதே" - அப்பரடிகள்

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன்உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

அத்தேவர் தேவர் அவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

- மாணிக்கவாசக சுவாமிகள்.



இவண்
தொகுப்பு ஆசிரியர்,
என்றும் சிவத்தொண்டில் தங்களன்பன்,
காசி S.R.S. கணேசன்,
(ஓய்வு) தலைமை ஆசிரியர்,
21,137 தட்டாந்தோப்பு தெரு,
கீழக்கரை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரதோஷ வரலாற்றுச் சுருக்கம்

தெட்சணாமூர்த்தி துதி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாறங்க முதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிரந்த பூரணமாய் வாய்க்கப்பாலாய்
எல்லார்க்கும் எல்லாமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமற் சொன்னவரை துதியாமற் துதித்து பவத் தொடக்கை
வெல்வாம்.

-திருவிளையாடற்புராணம் -- பரஞ்சோதிமுனிவர்

கந்த புராணத்தில் காணப்படுவது போல சிவபெருமான்ன இகழ்ந்த தக்ஷனுக்கு ததீசிமுனிவர் எவ்வளவோ அறிவுரைகள் கூறியும் கேளாத தக்ஷன் சிவனுக்கு எதிரான யாகத்தைத் தொடங்கினான், சிவ வழிபாட்டால் எண்ணிலா வரங்கள் பெற்ற தேவர்கள் தக்சன் செய்த யாகத்தில் சிவ நிந்தனை ஏற்பட்ட பொழுது தட்டிக் கேளாமல் வாளாவிருந்த காரணத்தால் நந்திதேவரின் சாபத்திற்கு ஆளாயினர். அமைதி இழந்தனர். அசுரர்களால் துன்பமுறத் தொடங்கினர்.

இந்நிலையில் தேவர்கள் ஒன்றுகூடி தா்ம் நிலையான வா்ழ்வு பெற வழிதேடி பிர்மாவையும் திருமாலையும் நாடினர். திருமாலின் வழிகாட்டலின் படி அமிழ்தம் உண்டால் அழிவில்லை என்றுணர்ந்து அசுரர்களுக்கும் அமிழ்தம் பெறும் ஆசையினை ஊட்டினர்.

ஆராவமுதமாகிய சிற்றம்பலமும் சிவனும் அருகிருக்க வெற்றம்பலம் தேட வேண்டாம் என பிர்மா எவ்வளவோ எடுத்துரைத்தும் பேராசை என்னும் மாயை பிடித்துந்த மந்திரமலையை மத்தாகவும் வாசுகி எனும் பாம்பைக். கயிறாகவும் கொண்டு பாற்கடலலைக் கடைந்து அமிழ்தம் பெற முயன்றனர். தேவர்கள் வால் பாகத்தையும் அசுரர்கள் தலைப்பாகத்தையும் பிடித்து இழுத்தனர். திருமால் கூர்மாவதாரம் (ஆமை வடிவம்) எடுத்து மந்திரமலை பாற்கடலினுள் அமிழ்ந்து விடாமல் தாங்கி நின்றார். வாசுகிப் பாம்பானது வலி தாளாமல் விஷத்தைக் கக்க, அவ்விஷமானது பாற்கடலுள் பட்டு ஆலகால விஷமாக மாறி அனைத்துயிர்களையும் அழிக்கப் பேருருக் கொண்டது. “தா்மொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தாற் போல” என்னும் பழமொழிக்கிணங்க விஷத்தின் கொடுமை கண்டு தேவர்களும் அசுரர்களும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

அமைதி குறையக் குறைய துன்பம் வளரும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இச்சூழலில் இந்த ஆபத்தை நீக்கவல்ல ஆபத்பாந்தவன் சிவபெருமானே எனத் திருமால் கூறக் கேட்ட அனைவரும் கைலாசம் சென்று சிவ சந்நிதியிலுள்ள நந்திதேவரைப் பணிந்து தங்களின் துன்பம் நீங்க சிவனிடம் பரிந்துரைக்க வேண்டினர். விஷம் வெளியிலிருந்தால் உலகமே அழிந்து விடும் என்று ஓலமிட்டனர். இவர்களின் வேண்டுதலை ஏற்ற நந்திதேவர் சிவனைப் பணிந்து கருணை காட்டும்படி வேண்டி நின்றார்.

யாவரும் வேண்டிக் கொண்டதற்கிணங்க சிவபெருமான் சுந்தரரை நோக்கி "அவ்விடத்தை இவ்விடத்திற்குக் கொணர்க" எனப் பணித்தார். சுந்தரரும் ஆலகால விஷத்தைத் தம் கையிலடக்கி சிவனிடம் அளித்து நின்றார். ஆராவமுதனான சிவபெருமானும் அவ்விஷத்தை உண்ணத் தொடங்கினார். அவர் உண்ணும் விஷம் சிவனுள் அடங்கிய எல்லா அண்ட சராசரங்களையும் அழித்துவிடும் என்றஞ்சிய அம்பிகை பார்வதி தேவியார், சிவனின் கண்டத்தில் கையை அழுத்தி விஷம் கீழிறங்காதபடி தடுத்து, ஆலகால விஷத்தை அமிழ்தமாக்கிக் கண்டத்தில் நிறுத்தினார். கண்டம் கறை பட்டதால் அரனாரும் திருநீலகண்டம் எனப் போற்றப் பெற்றார்.

தேவர்கள் பாற்கடலைக் கடையத் தொடங்கிய நாள் தசமி திதியாகும். சிவபெருமான் விஷமுண்ட நாள் மாசி மாதம் தேய்பிறை ஏகாதசி திதியுடன் கூடிய சனிக்கிழமையாகும்.

சிவபெருமானின் திருவருளால் மீண்டும் பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் பெற்ற தேவர்கள் திருமாலின் துணை கொண்டு அசுரர்களுக்கு அமிழ்தம் கொடாது தாமே அமிழ்தத்தை உண்டு ஆடிப்பாடிக் களித்தனர். தமக்குக் கிடைத்த உணவைக் கூட சிவனுக்குப் படைத்து சிவார்ப்பணம் எனக் கூறி உண்பதே சைவ நெறியாகும். இந்த உண்மையைக் கூடத் தெரியாத தேவர்களுக்குப் பாடம் புகட்ட எண்ணிய விநாயகப் பெருமான் தேவர்கள் அறியாத வண்ணம் மிஞ்சி இருந்த அமிர்த கலயத்தை எடுத்துச் சென்று திருக்கடவூரில் மறைத்து வைத்தார். அதனாலேயே அங்குள்ள பிள்ளையாருக்குக் கள்ளப்பிள்ளையார் எனும் பெயர் உண்டாகியுள்ளது. அங்கு கடத்திலிருந்த அமிர்தமானது சிவலிங்கமாக மாறியது. இக்காரணத்தால் அங்குள்ள இறைவர்க்கு அமிர்தகடேஷ்வரர் எனும் பெயர் வழங்கி வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நமக்கு ஓர் ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். அமிழ்தமுண்டதால் தமக்கு இனி அசுரர்களால் அழிவில்லை என்றுணர்ந்து ஆணவம் கொண்டு சிவனை வழிபடுவதை மறந்து ஆனந்தக் கூத்தாடி ஆர்ப்பரித்தனர். தேவர்கள் அமிழ்தமுண்டு களித்த நாள் துவாதசி திதியாகும்.

தேவர்களின் ஆணவத்தை அடக்க எண்ணிய சிவபெருமான் ஒரு எளியவனாக வந்து தேவர்களின் முன்னே ஒரு சிறு துரும்பை எடுத்துப் போட்டு அவர்களின் திறமையினால் அத்துரும்பை அசைத்துக் காட்ட வேண்டினார். தேவர்கள் எவ்வளவோ முயன்றும் முடியாது "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற உண்மையுணர்ந்து வெட்கித்து நின்றனர்.

"வல்லான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்னும் பொதுமறைக்கிணங்க தேவர்கள் அமிழ்தமுண்டதால் சாவா, மூவா நிலை பெற்றிருந்தாலும் இறைவனை வழிபட மறந்த காரணத்தால் இன்ப நுகர்ச்சியை இழந்து பெருந்துன்பமுற்றனர். சிவனை வணங்க யார் எப்பொழுது மறக்கிறார்களோ. அவர்கள் தேவர்களானாலும் துன்பப்படுவர். சிவனை நினைந்தால் துன்பம் விலகும் என்ற உண்மை கந்தபுராணத்தில் காணக்கிடக்கின்றது. விஷம் வந்த பொழுது சிவனை நாடி வந்தவர்கள் அமிழ்தம் கிடைத்த பொழுது அவ்வனை மறந்திருந்தது குற்றம் தானே. நன்றி மறப்பது நன்றல்லவே

"ஒன்றொரு பயன்தனை உதவினோர் மனங்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்தொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடு மல்லது கூற்றும் வேண்டுமோ!"

எனும் கந்தபுராண விருத்தத்தால் அறியலாம்.

இத்துன்பத்தினின்றும் விடுபட தேவர்கள் ஒன்றாகக் கூடி சிவ சந்நிதியை நோக்கிச் சென்றனர். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என்னும் வள்ளுவத்திற்கிணங்க செய்நன்றி மறந்த தேவர்களை சிவ சந்நிதியில் நுழைய விடாமல் காவல் தெய்வமாகிய நந்தி தேவர் இடைமறித்து இடமும் வலமுமாக அவர்களைத் துரத்தி சந்நிதியை மறைத்து வாசலில் நின்றார். இந்நிகழ்ச்சியை உட்பொருளாகக் கொண்டு தான் "சிவன் கோவிலுக்குச் செல்கையில் நந்தி மறைத்தார் போல" என்னும் பழமொழி நம் வழக்கிலுள்ளதை அறியலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

“செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்” என்னும் பொய்யா மொழிக்கிணங்க தாங்கள் செய்ய வேண்டிய சிவ பூஜையைச் செய்யாததால் ஏற்பட்ட துன்பம் உணர்ந்து வருந்தி, தேவர்கள் கைலாயத்தில் நுழைய வழிதேடி இடமும் வலமுமாக ஓடி “அரஹர, சிவசிவ” என ஓலமிட்டனர். இந்நிகழ்ச்சியே பிரதோஷ வேளையில் சிவாலயத்தில் செய்யப்படும் “சோமசூத்திர பிரதட்சணம்” என்பதாகக் கொள்ளப்படுகிறது. “சிவாய நம!” என்பதற்கு சிவனுக்கு வணக்கம் என்பது பொருள். “அரகர” என்பதற்கு சிவனே என் பாவங்களைப் போக்கு என்பது பொருள். அர = சிவன், ஹர = போக்கு.

தேவர்கள் படும் துன்பங்கண்டு மனம் பொறாத கருணைக் கடலாகிய அம்பிகை சிவபெருமானை வேண்டி நின்றார். தன்னை வழிபடுபவர்களுக்கு சர்வ மங்களங்களையும் அளிக்கக் கூடிய சர்வேஸ்வரன் “சிவசிவ” என்னும் சொற்கேட்டு சிந்தை குளிர்ந்து நந்திதேவரைச் சாந்தப்படுத்தி அம்மையுடன் நந்திதேவரின் இரு கொம்புகளுக்கிடையில் ஆனந்தத் தாண்டவமாடி விண்ணுலகோரும் மண்ணுலகோரும் துன்பம் நீங்கி இன்பம் பெற அருள்பாலித்த காட்சியே பிரதோஷ தரிசனமாகும்.

இக்காட்சி திங்கட்கிழமை திரியோதசி திதியன்று மாலை 4.30 மணிக்கு மேல் 6.00 மணிக்குள் நடைபெற்றதாக ஐதீகம். “தோஷா” என்றால் குற்றங்கள் மலிந்த இரவு. “ப்ர” என்றால் தொடக்கம். எனவே பிரதோஷமென்றால் துன்பம் நிறைந்த இரவின் தொடக்கம் என்று பொருள். பிர்தோஷா ரஜனீமுகம் என்பது அமர கோஷம். (நிகண்டு)

பிரதோஷ வேளையில் பிரமாவும் திருமாலும் பிற தேவர்களும் தங்கள் துன்பம் நீங்க சிவதரிசனம் காண சிவசந்நிதியில் ஐக்கியமாகி இருப்பதைக் கீழ்க்காணும் சுந்தரர் தேவாரப்பாடல் விளக்குகின்றது.

“இயக்கர் கின்னரர் யமனோடு வருணர், இயங்கு தீ, வளி,
ஞாயிறு, திங்கள்
மயக்கமில் புலி, வானரர் நாகம், வசுக்கள், வானவ
தானவரெல்லாம்
அயர்ப்பொன்றின்றி நின் திருவடியினை அர்ச்சித்தாற்
பெறுமாரருள் கண்டு
தியப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன் செழும்
பொழிற்றிருப் புன்கூருளானே!”

- சுந்தரர்.

உழைப்பால் உயரலாம் பொறாமையால் அல்ல.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

"வானிடத்தவரும் மண்மேல்வந்து அரன்தனை அர்ச்சிப்பர்
ஊனெடுத்துழலும் ஊமர் ஒன்றையும் உணரார்".

என்பதாக சிவஞான சித்தியார் எனும் நூலில் அருணந்திச் சிவாச்சாரியார் அழகுபடக் கூறுகின்றார். பிரதோஷ வேளையில் எல்லாத் தெய்வங்களும் பூலோக சிவசந்நிதிக்கு வந்து விடுகின்ற காரணத்தால் நாம் பிரதோஷ வேளையில் பிற தெய்வங்களின் சந்நிதிக்குச் செல்லாமல் சிவபெருமானையே துதித்தல் வேண்டும் என்பது மரபாகவுள்ளது. பிரதோஷ வேளையில் பெருமாள் கோவில் சந்நிதி திரையிடப்பட்டுள்ளதை இன்றும் நாம் காணலாம்.

திரயோதசி திதி சக்தியின் வடிவத்தையும், சதுர்த்தி திதி சிவ வடிவத்தையும் குறிப்பதாகவும், இவ்விரண்டினுடைய சேர்க்கையாகிய பிரதோஷ கால ஆரம்பம் சிவ போகத்தைத் தரும் என்பது சான்றோர் கருத்தாகக் கொள்ளப்படுகிறது.

பிரதோஷ வேளையில் நந்திக்கு அபிஷேகம் நடைபெறும் பொழுது நந்தி ஸ்தோத்திரமும், சிவனுக்கு அபிஷேகம் நடக்கும் பொழுது மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகமும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய போற்றித் திருத்தாண்டகமும் திருஞான சம்பந்தர் அருளிய கோளறு திருப்பதிகமும் திருநீற்றுப் பதிகமும் லிங்காஷ்டகமும் பாடுதல் வேண்டும்.

நந்தி தேவருக்கும் சிவபெருமானுக்கும் அபிஷேக ஆராதனைகள் முடிந்தபின் ஒரே நேரத்தில் இரு சந்நிதிகளிலும் தீபாராதனை நடைபெறும். அவ்வேளையில் யாவரும் சிரமேல் கரங்குவித்து "அரஹர சிவசிவ" என்றோ அல்லது ஓம் நமச்சிவாய பரமேஸ்வராய சசிசேகராய நம ஓம், பவாய குணசம்பவாய சிவ தாண்டவாய நம ஓம்" என்ற பஞ்சாட்சர மந்திரத்தையோ ஒரு சேரக் கூறுதல் வேண்டும்.

பிரதோஷ விரதமும் அதன் பலன்களும்

அமாவாசைக்கு அடுத்த பிரதமை திதியிலிருந்து 13 ஆம் நாளும் பௌர்ணமிக்கு அடுத்த பிரதமை திதியிலிருந்து 13ஆம் நாளும் திரயோததசி திதியுடன் கூடிய நாளே பிரதோஷ நாளாகும். இந்நாளை "பிரதோஷம்" என்று எல்லா நாட்காட்டிகளிலும் பஞ்சாங்கங்களிலும் குறிக்கப்பட்டிருக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரதோஷ நாளன்று விரதமிருப்பது மிக்க நலம் பயக்கும். சூரிய உதயத்திற்கு முன் குளித்து விட்டு பகல் முழுதும் இறை நாமத்தைக் கூறி பட்டினி இருப்பது நலம். வசதி வாய்ப்புடையோர் மௌன விரதமிருந்து சிவநாமத்தைச் ஜெபிப்பது சிறப்பு. பட்டினி இருக்க இயலாதவர்கள் ஒருவேளை உணவு கொள்வது நலம். பட்டினி இருப்பவர்கள் மாலையில் பிரதோஷ பூஜை முடிந்தவுடன் கோவிலில் கொடுக்கும் பிரசாதத்தை உண்டும் இரவில் பால், பழம் அருந்தியும் விரதத்தை நிறைவு செய்யலாம். பால், பழம் விரும்பாதவர்கள் சைவ உணவுண்டு விரதமிடலாம். விரத தினத்தன்று ஓரிரு ஏழைக்கேனும் அன்னமிடுதல் மிகச்சிறப்பானதாகும்.

விரதமென்பது பிறர் துன்பம் உணர்தலும் பொறியுணர்வுகளைக் கட்டுப்படுத்தி மனதை இறைவனிடம் ஒன்றச் செய்வதேயாகும். இந்நாட்களில் வீண்பேச்சைக் குறைப்பதும் நாம ஜெபம் செய்வதும் சிறந்தது.

நந்தீஸ்வரரின் தந்தையாகிய சிலாதமுனிவர் தம் தவ பலத்தால் வானுலகம் சென்றார். அப்பொழுது நரகலோகத்தின் தலைவரான எமதர்மர் முனிவரை வணங்கி வரவேற்று தம் உலகைச் சுற்றிக் காட்டினார். அங்கு மனிதர்கள் பூலோக வாழ்வின் போது தாம் அறிந்தும், அறியாமலும் செய்த பாவங்களுக்கு (தீமைகளுக்கு) ஏற்ப எப்படியெல்லாம் தண்டனை பெறுகின்றனர் என்பதை விளக்கிக் காட்டினார்.

இதையெல்லாம் கண்டுவந்த மகரிஷி அங்கிருந்த கல்மலையைக் காட்டி இது ஏன் இங்கு உள்ளது என வினவினார். உடனே யமன் பணிந்து தவயோகியே தாங்கள் சிறுவராயிருந்த பொழுது தங்கள் வீட்டில் உணவு உட்கொண்டிருந்த விருந்தினர் ஒருவரின் உணவில் மண் துகள் விழும்படி நடந்து சென்றுள்ளீர்கள். அவரும் அதனைக் கவனியாது உண்டுவிட்டார். அந்தக் கல்லே நாளடைவில் வளர்ந்து இங்கு பெரிய மலையாகவுள்ளது. தாங்கள் மரணமடைந்து இங்கு வரும் பொழுது அன்று அறியாமல் செய்த தவறுக்காக இங்கு இம்மலையை உண்டு முடிக்க வேண்டும் எனக் கூறினார்.

இத்தண்டனையினின்றும் நான் விடுபட யாது வழி என முனிவர் வினவ, அதற்குரிய வழியை நந்தியெம் பெருமான்தான் அறிவார் என்பதை யமன் வினையமுடன் கூறினார். அவ்வாறே நந்தியெம் பெருமானிடம் அக்கல்மலையை உண்ணாது ஒழிய வழி கூறுமாறு வேண்டினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நந்தியெம்பெருமானும் தந்தையைப் பணிந்து, தந்தையே! தாங்கள் பூலோகம் சென்று 12 ஆண்டுகள் பிரதோஷ விரதமிருந்து மகேஸ்வரனை வழிபட்டால் இக்கல்மலை சாம்பலாகி தங்கள் கையளவாகக் குறைந்து விடும். அதனை நீங்கள் எளிதாக உண்டு முடித்து விடலாம் என விளக்கினார்.

இவ்வாறே மனிதர்கள் தம் வாழ்நாளில் செய்யும் தவறுகளும் குற்றங்களும் பிரதோஷ பூஜையாலும் விரதத்தாலும் சாம்பலாகி அவர்கள் நற்கதியடைய வழி வகுக்கும் என்ற உண்மையை இக்கதையானது நமக்கு நன்கு விளக்கும்.

இப்பிரதோஷ காலங்களில் சிவதரிசனம் செய்வதால் சகல பாவங்களும் விலகி புண்ணியமுண்டாகும். சகல சௌபாக்கியங்களும் கை கூடும். காளை வாகனத்தில் மதிசூடிய மகேஸ்வரனை தேவியுடன் பிரதோஷ காலத்தில் வழிபடுவோர் ஆயிரம் அசுவமேத யாகங்கள் செய்த பெரும் பயனடைவர். ஒரு பிரதோஷ தினத்தில் விரதமிருந்து பூஜை செய்பவர்கள் ஓராண்டு சிவ பூஜை செய்த பலனையும், சனிக்கிழமை வரும் மகா பிரதோஷத்தில் விரதமிருந்து பிரதோஷ வழிபாட்டில் கலந்து கொள்பவர்கள் ஐந்தாண்டு சிவபூஜை செய்த பலனையும் ஒரு திங்கட்கிழமை வரும் (சோமவார) பிரதோஷ நாளன்று விரதமிருந்து பிரதோஷ வழிபாட்டில் கலந்து கொள்பவர்கள் 12 ஆண்டுக்கொருமுறை வரும் மகாமகத்தில் கும்பகோணம் மகாமகக்குளத்தில் குளித்த நற்பலனையும், தொடர்ந்து பதினோறு பிரதோஷ விரதமிருந்து பூஜை செய்பவர்கள் ஒரு கும்பாபிஷேகத்தைக் கண்ட பலனையும் நூற்று இருபது பிரதோஷங்களில் விரதமிருந்து பூஜை செய்பவாகள் மறுபிறவியற்று சிவபதம் அடைவர் என்றும் அருளாளர்கள் கூறுகின்றனர்.

பிரதோஷ பூஜையில் கலந்து வழிபடுவதால் மனிதன் அறியாமையாலும் ஆணவத்தாலும் செய்யும் சகல பாவங்களும் நீங்கும் என்று பிரமோத்திர காண்டத்தில் கூறப்பட்டுள்ளதை அறியலாம். இவ்வழிபாட்டால் கல்வி, செல்வம் முதலிய பலநன்மைகள் உண்டாவதுடன் மனதிற்கினிய மண வாழ்க்கையும், புத்திர சந்தானமும் உண்டாகும். கடன், வறுமை, தீராநோய், பயம், மனக்கவலை, தீயநட்பு, மரண வேதனை, மாங்கல்ய தோஷம் முதலிய சகல துன்பங்களும் நீங்கும். சகல சௌபாக்கியங்களும் உண்டாகும் என கடம்பவன புராணம் விளக்குகின்றது. வீட்டிலும் நாட்டிலும் அமைதியும் இன்பமும் நிலைக்க பிரதோஷ வழிபாடு அவசியம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரதோஷ பூஜையின் விளக்கம்

எப்பொழுதும் திரயோதசி முழு அளவில் ஒரே நாளில் வருவதில்லை. இத்தகைய சூழ்நிலையில் எந்த நாளில் பிரதோஷ வழிபாடு செய்ய வேண்டும் என்பதைக் குறித்து அன்பர்களால் கால அட்டவணை தயாரித்து வழங்கப்படுகிறது.

ஒரு நாளில் 24 மணியளவு முழுவதும் உள்ள திரயோதசி திதி உத்தமத் திரயோதசி எனவும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை உள்ள திரயோதசி மத்திமத் திரயோதசி எனவும் அதற்கும் குறைவாயுள்ள திரயோதசி நாள் அதமத்திரயோதசி எனவும் வழங்கப்படுகிறது. மாலை 4.30 மணிக்கு மேல் உள்ள திரயோதசி நாளையே பிரதோஷ நாளாகக் கொள்ள வேண்டும். மாலை 4.30 மணிக்குள் திரயோதசி திதி முடிவதாயிருந்தால் அந்நாளுக்கு முந்திய நாளையே பிரதோஷ நாளாகக் கொள்ளுதல் வேண்டும்.

பிரதோஷ வேளையில் முதலில் நந்தி தேவருக்கும் சுவாமிக்கும் அம்பாளுக்கும் அபிஷேக ஆராதனைகளும் அலங்காரமும் சிறப்பாக நடைபெறும். தேவியுடன் கூடிய சந்திரசேகர மூர்த்தியை காளைவாகனத்தில் அலங்கரித்து எழுந்தருளச்செய்து கோவிலை மூன்று முறை வலம்வருவர். பக்தர்கள் புடைசூழ முதற் சுற்றில் வேதபாராயணமும் இரண்டாம் சுற்றில் திருமுறை பாராயணமும் மூன்றாம் சுற்றில் நாதஸ்வர மங்கள இசையும் இசைக்கப்படும்.

முதற்சுற்றில் ஈசனின் திருவடியைத் தாங்கி நிற்கும் எட்டுத்திசை பாலகர்களுக்கு அவர்களின் பலியீடத்தில் நைவேத்தியம் வைக்கப்படும். இரண்டாம் சுற்றில் அவர்களின் மனைவிமார்களுக்கு பலிபீடத்தில் நைவேத்தியம் வைக்கப்படும். மூன்றாம் சுற்றில் சகல தேவதைகளுக்கும் தீபாராதனை காட்டப்படும். வடகிழக்கு (ஈசான்ய) மூலையில் செய்யப்படும் தீபாராதனை மிகவும் பிரசித்தமுடையதாகக் கருதப்படுகிறது.

மகாப்பிரதோஷம் என்பது சிவபெருமான் நஞ்சுண்ட நாளாகிய சனிக்கிழமையும் சிவபெருமான் சந்தியா நிருத்தமெனும் ஆனந்தத் தாண்டவமாடிய திரயோதசி திதியும் இணைந்து வரும் நாளைக் குறிக்கும். இச்சனிப் பிரதோஷ நாளும் திங்கட்கிழமையுடன் கூடிய பிரதோஷ நாளும் மிகவும் சிறப்புடையவையாகக் கருதப்படுகின்றன.

நாட்டைக் காத்தால் வீட்டைக் காக்கும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவாலயம் இல்லா இடத்தில் பிரதோஷ காலத்தில் வில்வ இலையையோ வில்வமரத்தையோ சிவனாகப் பாவித்து, தீப,தூப, நைவேத்தியம் செய்து வழிபடலாம் என்பது ஆகம விதி. சுவாமிக்கு அலங்காரம் நடைபெறும் பொழுது எல்லா சந்நிதிகளிலும் திரையிடப் பெற்றிருக்கும். அப்படித் திரையிட்டிருக்கும் பொழுது சாமி கும்பிடுதல் கூடாது என்பது விதியாகும்.

நாம் செய்த வழிபாட்டை இறைவன் ஏற்றுக்கொண்டு நமக்கு அருள் வழங்குகின்றார் என்பதை விளக்குவதற்காகத்தான் பூஜையின் முடிவில் தீர்த்தம் வழங்கப்படுகிறது. இதனைப் பெற்று கண்களில் ஒற்றிக் கொண்டு வாயிலும் விடுதல் வேண்டும். மீதமுள்ள நீரைத் தலையில் தெளித்துக் கொள்ளலாம். தீர்த்தத்தையும் பிரசாதத்தையும் (திருநீறு, குங்குமம்) கீழே சிந்துவதும் குப்பையில் வீசுவதும் சிவ நிந்தனை செய்த பெரும்பாவத்திற்கு ஒப்பாகும் எனக் கருதப்படுகிறது.

பூஜையில் கலந்து கொள்ளும் அன்பர்கள் அபிஷேக அலங்காரத்திற்குரிய பொருட்களைத் தம்மால் இயன்ற அளவு கொடுத்து உதவுவதுடன் ஆலயத்தினுள் அமைதிகாப்பதும் ஆலயத்தூய்மை காப்பதும் நைவேத்தியப் பொருட்களைப் பங்கிடுவதும் சிறந்த தொண்டாகும். ஆலயத்தில் சிறிது நேரமாவது அமர்ந்து இறைவனைத் தியானம் செய்தல் வேண்டும்.

சர்வமங்களங்களையும் அருளும் சர்வேஸ்வரனை நலம் தரும் பிரதோஷத்தில் நாமும் கண்டு வணங்குவோம் வாருங்கள்.

சோம சூத்திர பிரதட்சணம்

பிரதோஷ வேளையில் மூலஸ்தானத்துள் எழுந்தருளி இருக்கும் சிவலிங்க மூர்த்தியை மூன்று முறை வலம் வருவதற்கு மாறாக "சோம சூத்திர பிரதட்சணம்" (அப்பிரதட்சணம்) செய்ய வேண்டும் என்பது மரபு. சோம சூத்திரம் என்பது சிவலிங்க மூர்த்தியின் அபிஷேக நீர்விழும் நிர்மால்ய (தீர்த்த)த் தொட்டியைக் குறிக்கும்.

முதலில் சந்நிதியில் நின்று சிவலிங்கத்தையும் நந்தி தேவரையும் வணங்கி அப்பிரதட்சணமாக அதாவது இடப்புறமாக சண்டிகேசுவரர் சந்நிதிவரை சென்று அவரை வணங்கிவிட்டு அப்படியே பிரதட்சணமாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

(வலமாக) திரும்பி வந்து முன்போல சிவலிங்கத்தையும் நந்தி தேவரையும் தரிசித்து விட்டு வலக்கம் போல் ஆலயத்தை வலம் வரும் போது சுவாமி அபிஷேக நீர்விழும் நிர்மால்யத் தொட்டியைக் கடக்காமல் நின்று கோபுரத்தையும் பிரதோஷ லிங்கத்தையும் வணங்கிவிட்டு வந்த வழியே திரும்பி அப்பிரதட்சணமாக வந்து நந்திதேவரிடம் நின்றபடியே அவரின் இரு கொம்புகளுக்கிடையே சிவலிங்க மூர்த்தியைக் கண்டு வணங்குவது ஒரு அப்பிரதட்சணமாகும். ***இதன் விளக்கத்தை அட்டையின் உட்புறம் காணலாம்.***

துன்பம் நீங்கவேண்டி தேவர்கள் கைலாயத்திற்கு சிவனைக் காணச் சென்ற பொழுது நந்திதேவர் சினங்கொண்டு நன்றி மறந்த தேவர்களை இடைமறித்து விரட்டியதால் கைலாயத்தில் நுழையும் வழிதேடி இடமும் வலமாக ஓடி இறைவனின் நாமத்தைக் கூறி முறையிட்டதைப் போல நாமும் பிரதோஷ வேளையில் சாதாரண நாட்களில் மூன்று முறையும், திங்கட் கிழமை வரும் பிரதோஷ நாளில் ஏழு முறையும், சனிக்கிழமை வரும் பிரதோஷ நாளில் பதினோறு முறையும் சோம சூத்திரப் பிரதட்சணம் (அப்பிர தட்சணம்) செய்வதால் அநேக அசுவமேதயாகம் செய்த பலன் நமக்குக் கிட்டுவதாக நம்பப்படுகிறது. அதிகம் சுற்ற முடியாதவர்கள் மூன்று முறை சுற்றினாலே போதுமானதாகக் கருதப்படுகிறது. சுவாமி புறப்பாட்டிற்குப் பின் கோவிலில் அப்பிரதட்சணம் செய்யக்கூடாது.

சோம சூத்திரப் பிரதட்சணத்தை (அப்பிர தட்சணம்) தனித்திருக்கும் சிவலிங்க சன்னதியில் மட்டுமே செய்ய வேண்டும். அம்பிகையுடன் சேர்ந்திருக்கும் சன்னதிகளில் செய்யக் கூடாது. சாதாரண காலங்களில் வலம் வருதல் போல் வலம் வரலாமென்பது வணக்கத்திற்குரிய ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளின் கருத்தாகும்.

சாதாரண காலங்களில் பிள்ளையார் கோவிலை ஒரு முறையும், சூரியன் கோவிலை இருமுறையும், சிவன்,முருகன் கோவிலை மூன்று முறையும்; பெருமாள், அம்பாள் கோவில்களை நான்கு முறையும்; அரச மரத்தை ஏழு முறையும் வலம் வருதல் வேண்டும்.

நவக்கிரகங்களை ஏழு முறை வலமாகவும் இரண்டுமுறை இடமாகவும் சுற்றி வருதல் வேண்டும். ஏனெனில் சாயகிரகங்களான ராகு,கேதுவுக்கு தனி வீடு இல்லாததாலும் அவை வான்வெளியில் சூரியனை இடமிருந்து வலமாகச் சுற்றுவதை வான் ஆராய்ச்சியாளர் உறுதி செய்வதாலும் இவ்வாறு கருதப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நந்தி பூஜையின் விளக்கம்

மகப்பேறு இல்லாத சிறந்த சிவபக்தராகிய சிலாதர் எனும் முனிவர், தம் மூதாதையருக்கு நீர்க்கடன் செய்ய தமக்கு ஒரு மகன் வேண்டுமென சிவ பெருமானிடம் வேண்டினார். இறைவனும் அவர் வேண்டுதற் கிணங்கி ஒரு பெரும் சிவ வேள்வி நடத்த ஆணையிட்டார். அவ்வாறே வேள்விக்குரிய இடத்தைத் தேர்ந்து யாக குண்டம் அமைக்க பெரிய குழியைத் தோண்டினர். அக்குழியினுள் இருந்த பெட்டியில் ஓர் அழகிய ஆண்குழந்தை இருப்பதைக் கண்டு வியப்புற்று, இதுவும் சிவன் செயலே என உணர்ந்து, சீரோடும் சிறப்போடும் வளர்த்து நந்தி எனும் பெயர் சூட்டினார்.

இறைவன் அளித்த திருமகனுக்கு ஏழு வயது நிரம்பியது. அவன் எட்டு வயதில் இறந்துவிடுவான் என்பதைத் தம் ஞானத்தால் அறிந்த முனிவரும் அவரது மனைவி சித்திராவதியாரும் பிள்ளைப் பாசத்தால் கட்டுண்டு வருந்தினர். பெற்றோரின் துன்பத்தைத் தம் குறிப்பாலறிந்த அக்குழந்தை தம் தந்தையை நோக்கி சிவனுக்கு அடிமைபூண்ட தாங்கள் சிந்தை கலங்கலாமா? அவனருளால் ஆகாதது இவ்வுலகில் ஏதுமுண்டா? கவலையை விடுங்கள் நானும் தவம் செய்து சிவனருளால் தீர்க்காயுளைப் பெறுவேன் எனக் கூறி தவம் செய்யத் தொடங்கினார்.

ஒரு கோடி ருத்திர ஜெபம் செய்தவுடன் இறைவன் உமாதேவியாருடன் காட்சி கொடுத்து என்ன வரம் வேண்டுமெனக் கேட்க, "நான் இன்னும் ஏழு கோடி ருத்திர ஜெபம் செய்ய அருள்பாளிக்க வேண்டும்," என வேண்டி நின்றார். அவ்வாறே ஏழு கோடி ருத்திர ஜெபம் செய்து முடித்தவுடன் இறைவன் மீண்டும் தோன்றி உனக்கு வேண்டும் வரத்தைக் கேள்? எனக் கூறினார். நந்திதேவர் இன்னும் பல கோடி ருத்திர ஜெபம் செய்ய அருள்தர வேண்டும், என வேண்டி நின்றார். "சிவசிவ" என்பது ருத்திர ஜெபமாகும்.

நீ இதுவரை செய்த ருத்திர ஜெபத்திற்கே இந்திரனுக்கு இணையான பெரும்பதம் பெறல் வேண்டும். நீ இதற்கு மேலும் இவ்விளவயதில் ஜெபம் செய்ய வேண்டாம். நீ விரும்பும் வரம் எதுவானாலும் கேள் என சிவபெருமான் கூறினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இது கேட்ட நந்தி தேவர், ஐயனே! நான் இறப்பும் பிறப்புமற்று என்றும் உம்மைச் சுமந்து நிற்கும் வரந்தரல் வேண்டும். என் பிறப்பிற்குக் காரணமான என் தந்தையாகிய சிலாத முனிவர்க்கும் அவரின் பிதுர்க்களுக்கும் மோட்ச கதி கிடைக்க வேண்டுமென பிரார்த்தித்து நின்றார்.

சிவபெருமான் சிந்தை மகிழ்ந்து நீ விரும்பிய வண்ணமே அருள் புரிகின்றோம். இன்று முதல் எம்மை வணங்குவோர் உம்மையும் வணங்குவர். சிவ கணங்களுக்கு நீயே தலைவனாவாய். பொற்பிரம்பும், உடைவாளும் ஏந்தி சிவசந்நிதியில் காவல் தலைவனாய் இரு. என்னை வணங்க வருவோர் உன்னை வணங்கி, உன் அனுமதி பெற்ற பிறகே என்னை வணங்கி அருள் பெறுவர். நான்கு வேதங்களும் (ரிக், யசுர், சாமம், அதர்வணம்) உனது நான்கு கால்களாகட்டும், தர்மம் உனது வாலாகட்டும் என வரமளித்தருளினார்.

சிவபெருமான் விஷமுண்ட பொழுது மனம் பொறாது அவரது வாயைத் தம் நாவால் நக்கி வடிந்த விஷத்தை உண்டு தம்மெய்யன்பை வெளிப்படுத்தியவர் நந்தி தேவர். இக்காரணத்தாலே தான் விஷமுறிவுக்காக வெல்லம் கலந்த பச்சரிசியை நைவேத்தியமாக நந்திக்குப் படைத்து, எல்லா விஷங்களையும் போக்கவல்ல அருகம் புல்லை மாலையாக அணிவிக்கப்படுகிறது. விஷத்தை முறித்துக் காக்கும் காரணத்தால் இதற்குக் காப்பரிசி எனப் பெயர் வழங்கிவருகிறது.

தேவர்கள் ஆலகால விஷத்தால் துன்புறா வண்ணம் காத்தருளும்படி கைலாச வாசனிடம் முதன்முதலில் பரிந்துரைத்து விண்ணப்பித்தவர் நந்தி பெருமானாகையால் பிரதோஷ வேளையில் நந்திக்கு முதலில் அரிசிமாவினால் நெய் விளக்கிட்டு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதாக ஆன்றோர் கூறுவர். அலங்காரத்தின் பின் வில்வத்தால் அர்ச்சனையும் நடைபெறும். நந்திதேவருக்கு அருகம்புல்மாலை, வில்வமாலை, மஞ்சள் சிவந்தி மாலை உகந்தது.

பிரதோஷ வேளையில் நந்தியின் வாலுக்கு அடியிலுள்ள பீஜத்தைத் தொட்டுக் கொண்டு இரு கொம்புகளுக்கிடையே சிவலிங்கத்தைப் பார்த்து "ஓம் ஹர" என மனதிற்குள் 11 முறை கூறி வணங்குவது எண்ணற்ற நன்மை பயக்கும் என்பது நம்பிக்கை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரம்மாதி தேவர்களும் முனிவர்களும் நந்தியிடம் அனுமதி பெற்றுத்தான் சிவதரிசனம் செய்ய வேண்டும் என்பது விதி. ஆகவே நாமும் சிவதரிசனம் செய்யுமுன், நந்தியை வணங்கி அனுமதி பெற்று நம் குறைகள் நீங்கப் பரிந்துரைக்குமாறு வேண்டிக் கொள்ள வேண்டும்.

யோக நிலையில் ஊஞ்சலில் அமர்ந்திருக்கும் சிவபெருமானை தம் மூச்சுக் காற்றால் ஆடச் செய்பவர் நந்திதேவர். ஆகவே நாம் எக்காரணத்தாலும் நந்திக்கும் சிவனுக்கும் இடையில் குறுக்கே செல்வதோ, நின்று வணங்குவதோ கூடாது. பூஜை செய்பவர்களுக்கு மட்டும் விதிவிலக்காகும்.

சிவலிங்கம் பதியையும் (இறைவன்) நந்தி பசுவாகிய ஆன்மாவையும் பலிபீடம் நம்மைப் பற்றி நிற்கும் பாசத்தையும் குறிக்கும். பாசத்தைப் பின்னே தள்ளி ஆன்மாக்களாகிய நாம் எப்பொழுதும் இறைவனை நோக்கியே இருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் முகத்தான் சிவனுக்கு எதிரே நந்தி வைக்கப்பட்டுள்ளது. மூலமலம் நீக்கப்பெற்று முக்தி பெற்ற ஆன்மாவே நந்தியாகும்.

சிவன் உண்ட விஷத்தை நாமும் உண்டுள்ளோம், நம்மை விட சிவன்பால் அன்பு கொண்டோர் யாரிருக்க முடியும்! என ஒரு முறை நந்தியம்பெருமான் நினைத்துள்ளார். அந்த ஆணவ மலத்தை நீக்குவதற்காகத்தான் கோயம்பேடு என்னுமிடத்தில் நந்திக்கு மூக்குக் கயிறு பூறப்பட்டுள்ளதாகச் செவிவழிச் செய்திகூறும். அன்பு செலுத்துவதில் கூட ஆணவம் கூடாது என்பதை இச்செய்தி நமக்கு அறிவுறுத்தும்.

நந்தனார் சிவனைத் தரிசிக்க நந்தி விலகிய திருத்தலம் திருப்புன்கூர். திருஞான சம்பந்தர் சிவனைத் தரிசிக்க நந்தி விலகிய தலம் திருப்பட்டீச்சுரம், திருப்பூந்துருத்தி.

ஒரே கருங்கல்லால் ஆன தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்திலுள்ள நந்தியும், சுண்ணாம்பால் உருவாக்கப்பட்ட இராமேஸ்வரம் கோவிலிலுள்ள நந்தியும், வெண்சங்குகளை அரைத்து உருவாக்கப்பட்ட சுசீந்திரம் கோவிலிலுள்ள நந்தியும் தமிழகத்திலுள்ள பெரிய நந்திகளாகக் கருதப்படுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

“ஓம் தத்புருஷாய வித் மஹே
வக்ர துண்டாய தீம ஹி
தந்நோ தந்திப் பிரசோத யாத்!

– காயத்திரி மந்திரம்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!

– திருமந்திரம்.

நந்திதேவர் துதி

வந்திறை அடியில் தாழும் வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள் சிந்தி வேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலும் தொண்டர் அலகிடும் குப்பையாக்கும்
நந்தியெம் பெருமான் பாதம் நகைமலர் முடிமேல் வைப்பாம்.

– திருவிளையாடற் புராணம்.

நந்திதேவர் பெருமை

நந்தியெம் பெருமான் தன்னை நாடொறும் வணங்கு வோர்க்கு
புந்தியில் ஞானம் சேரும் பொலிவுறு செல்வம் கூடும்
சிந்தையில் அமைதி தோன்றும் சிறப்புறு மக்கள் சேர்வர்
இந்திர போகம் கிட்டும் இணையிலா வாழ்வுதானே!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நலந்தரும் நந்தீஸ்வரர்

கந்தனின் தந்தையைத்தான் சுமந்து செல்வாய்
நந்தனார் வணங்குவதற்கு நடையினில் விலகிநின்றாய்
அந்தமாய் ஆதியாகி அகிலத்தைக் காக்கவந்தாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடிவந் தெம்மைக்காப்பாய்.

ஒன்பது கோள்களுக்கும் உயரிய பலன்கொடுப்பாய்
பொன்பொருள் குவியவைப்பாய் புகழையும் வளர்த்துவைப்பாய்
சிந்தனை வளங்கொடுப்பாய் சிகரத்தில் தூக்கிவைப்பாய்
நந்தியே உனைத்துதித்தேன் நாடிவந் தெம்மைக்காப்பாய்

மாலைகள் ஏற்கவைப்பாய் மழலைகள் பிறக்கவைப்பாய்
வேலைகள் கிடைக்கவைப்பாய் விதியையும் மாற்றிவைப்பாய்
சோலையின் வண்ணப்பூவைச் சூடிடும் நந்திதேவா!
வேளையும் உனைத்துதித்தேன் விரைந்துவந் தெம்மைக்காப்பாய்!

தஞ்சையில் பெரியநந்தி தளிருடல் வெண்ணெய்சாத்தி
அஞ்சாத வேந்தன்நந்தி அழகிய நெகமம்நந்தி
குஞ்சர முகத்தான்தந்தை குந்திடும் ரிஷபநந்தி
தஞ்சமென உனைப்பணிந்தேன் தயங்காது எம்மைக்காப்பாய்

சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி
சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி
கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி
கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி

பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி
பார்வதியின் சொல்கேட்டுச் சிரிக்கும் நந்தி
நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி
நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி

செங்கரும்பு உணவுமாலை அணியும் நந்தி
சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி
மங்களங்கள் யாவையும் கொடுக்கும் நந்தி
மனிதர்களின் துயர்போக்க வந்த நந்தி

அருகம்புல் மாலையை அணியும் நந்தி
அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி
வருங்காலம் நலமாக வைக்கும் நந்தி
வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி

ஏற்பது இகழ்ச்சி.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி
பேரருளை மாந்தர்க்கு வழங்கும் நந்தி
வரலாறு படைத்துவரும் வல்ல நந்தி
வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி

கெட்டகனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலங்காக்கும் இனிய நந்தி
வெற்றிதரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிவிட விளையும் நந்தி

வேந்தன்நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்கவைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்ததிருப் புன்கூரில் சாய்ந்த நந்தி
செவிசாய்த்து அருள்கொடுக்கும் செல்வ நந்தி

கும்பிட்ட பக்தர்துயர் நீக்கும் நந்தி
குடங்குடமாய் அபிசேகம் பார்த்த நந்தி
பொன்பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்சேர்க்க எம்மில்லம் வருக நந்தி.

ஸ்ரீ சிவபெருமான் துதி

ஓம் தத்புருஷாய வித் மஹே
மஹா தேவாய தீம ஹி
தந்நோ ருத்ரப் பிரசோத யாத்!

சிவ புராணம்

திருச்சிற்றம்பலம்

அரஹர நமப் பார்வதி பதே
அரஹர மஹா தேவா!
தென்னா டுடைய சிவனே போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லலறுத்து ஆனந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசக மென்னும் தேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க!

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

ஈசனடி போற்றி! எந்தையடி போற்றி!
தேசனடி போற்றி! சிவன்சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துரைநம் தேவன் அடிபோற்றி!

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி!
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாளே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்.

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினேயேன் புகழும்ஆறு ஒன்றறியேன்.

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும்பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா! எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே.

எண், எழுத்து இகழேல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே!

கறந்தபால் கன்னலொடு நெய்கலந் தாற்போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைத்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும்கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளுருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெட

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவிலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி என்ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!

ஊக்கமது கைவிடேல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்ந்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்ந்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்கும்எங் காவலனே காண்பரிய பேரொளியே!
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றாச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றேனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்குடும்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா! அரனேயோ! என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே! ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல் லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம். - மாணிக்கவாசக சுவாமிகள்.

திருஞான சம்பந்தர் அருளிய கோளறு திருப்பதிகம்

1. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தன் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி சனி பாம்ரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

2. என்பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க எருதேறி
ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென் உளமே
புகுந்தஅதனால்
ஒன்பதோடு ஒன்றோடுஏழு பதினெட்டோடு ஆறும் உடனய
நாள்களவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

3. உருவளர் பவளமேனி ஒளிநீறணிந்து உமையோடும்
வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்தென் உளமே
புகுந்தஅதனால்
திருமகள் கலையதுார்தி செயமாதுபூமி திசை தெய்வ
மானபலவும்
அருநெறி நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்குமிகவே.

4. மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து மறையோதும் எங்கள்
பரமன்
நதியோடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென் உளமே
புகுந்தஅதனால்
கொதியுறு காலன்அங்கி நமனோடு துாதர் கொடு நோய்கள்
ஆனபலவும்
அதிகுண நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே

5. நஞ்சணி கண்டன்எந்தை மடவாள்தனோடும் விடையேறும்
நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென் உளமே
புகுந்தஅதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும் மிகையான
பூதமவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்ல அடியாரவர்க்கு மிகவே.

6. வாள்வரி அதளதாடை வரிகோவணத்தர் மடவாள்
தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென் உளமே
புகுந்தஅதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

ஈவது விலக்கேல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

7. செப்பிள முலைநன்மங்கை ஒரு பாகம்ஆக விடையேறு
செல்வன்அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல்அணிந்தென் உளமே
புகுந்தஅதனால்
வெப்போடு குளிரும்வாதம் மிகையான பித்தும் வினையாக
வந்துநலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல அடியார் அவர்க்கு மிகவே.

8. வேள்பட விழிசெய்தன்று விடைமேல் இருந்து மடவாள்
தனோடும் உடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென் உளமே
புகுந்தஅதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்தனோடும் இடராக வந்து
நலியாக
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

9. பலபல வேடமாகும் பரன்நாரி பாகன்பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கும் முடிமேல் அணிந்தென் உளமே
புகுந்தஅதனால்
மலர்மிசையோனும் மாலும் மறையோடு தேவர் வருகால
மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

10. கொத்தளர் குழலியோடு விசையற்கு நல்கு குணமாய
வேடவிகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல்அணிந்தென் உளமே
புகுந்தஅதனால்
புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல் திருநீறு
செம்மைதிடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே.

11. தேனமர் பொழில்கொள்ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான ஞான
முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து நலியாத
வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர்
ஆணைநமதே.

- திருச்சிற்றம்பலம்

இயல்வது கரவேல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய போற்றித் திருத்தாண்டகம்

1. வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி! மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி!
ஊற்றாகி உள்ளே ஒளிந்தாய் போற்றி! ஓவாத சத்தத்து ஒலியே போற்றி!
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி! ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி!
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

2. பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி! பிறவி அறுக்கும் பிரானே போற்றி!
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி! மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி!
பொய்சார் புரமூன்றும் எய்தாய் போற்றி! போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி!
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

3. மருவார் புரமூன்றும் எய்தாய் போற்றி! மருவிஎன் சிந்தை புகுந்தாய் போற்றி!
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி! உள் ஆவிவாங்கி ஒளித்தாய் போற்றி!
திருவாகி நின்ற திறமே போற்றி! தேசம் பரவப் படுவாய் போற்றி!
கருவாகி ஓடும் முகிலே போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

4. வானத்தார் போற்றும் மருந்தே போற்றி! வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி!
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி! ஓங்கி அழலாய் நிமிந்தாய் போற்றி!
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி! தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி!
கானத்தீ ஆடல் உகந்தாய் போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

5. ஊராகி நின்ற உலகே போற்றி! ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி!
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி! பெயரானதென் சிந்தை புகுந்தாய் போற்றி!
நீராவி ஆன நிழலே போற்றி! நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி!
காராகி நின்ற முகிலே போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

6. சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி! தேவர் அறியாத தேவே போற்றி!
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்ந்தாய் போற்றி! போகாது என்சிந்தை புகுந்தாய் போற்றி!
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி! பற்றி உலகை விடாதாய் போற்றி!
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

7. பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி! பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி!
எண்ணும் எழுத்தும்சொல் ஆனாய் போற்றி! என்சிந்தை நீங்கா இறைவா போற்றி!
விண்ணும் நிலனும்தீ ஆனாய் போற்றி! மேலவர்க்கும் மேலாய் நின்றாய் போற்றி!
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

8. இமையாது உயிராகி இருந்தாய் போற்றி! என்சிந்தை நீங்கா இறைவா போற்றி!
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி! ஊழி ஏழான ஒருவா போற்றி!
அமையா வருநெஞ்சம் ஆர்த்தாய் போற்றி! ஆதி புராணனாய் நின்றாய் போற்றி!
கமையாகி நின்ற கனலே போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

9. மூவாய் பிறவாய் இறவாய் போற்றி! முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி!
தேவாதி தேவர்தொழும் தேவே போற்றி! சென்றே எங்கும் பரந்தாய் போற்றி!
ஆவர் அடியேனுக் கெல்லாம் போற்றி! அல்லல் நலிய அலந்தேன் போற்றி!
காவாய் கனகத் திரளே போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

10. நெடிய விசும்பொடு கண்ணே! போற்றி! நீள அகலம் உடையாய் போற்றி!
அடியும் முடியும் இல்லாய் போற்றி! அங்கொன்றும் அறியாமை நின்றாய் போற்றி!
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி! கோயிலாய் என்சிந்தை கொண்டாய் போற்றி!
கடிய உருவோடு மின்னே போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

11. உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி! ஓதாதே வேதம் உணர்ந்தாய் போற்றி!
எண்ணாது இலங்கைக்கோன் தன்னைப் போற்றி! இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி!
பண்ணார் இசையின்சொல் கேட்டாய் போற்றி! பண்டே என்சிந்தை பகுத்தாய் போற்றி!
கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

12. பொறையுடைய பூமிநீர் ஆனாய் போற்றி! பூதப்படை ஆயுள் புனிதா போற்றி!
நிறையுடை நெஞ்சின் இடையாய் போற்றி! நீங்காது என்னுள்ளத் திருந்தாய் போற்றி!
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி! வானோர் வணங்கப் படுவாய் போற்றி!
கறையுடைய கண்டம் உடைத்தாய் போற்றி! கயிலை மலையானே போற்றி! போற்றி!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

லிங்காஷ்டகம்

1. ப்ரஹ்மமுராரி ஸுரார்சித லிங்கம்
நிர்மலபாஸித ஷோபித லிங்கம்
ஜந்மஜதுக்க விநாசக லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

2. தேவமுனிப்ரவ ரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணாகர லிங்கம்
ராவணதர்ப்ப விநாசக லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

3. ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்திவிகர்த்தன காரண லிங்கம்
ஸித்தஸுராஸுர வந்தித லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

4. கனகமஹாமணி பூஷித லிங்கம்
பணிபதிவேஷ்டித ஸோபித லிங்கம்
தக்ஷஸுயக்ஞ விநாசக லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

5. குங்குமசந்தன லேபித லிங்கம்
பங்கஜஹாரஸு ஸோபித லிங்கம்
ஸஞ்சிதபாப விநாசக லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

6. தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர்பக்திபிர் வேசித லிங்கம்
தினகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

7. அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர விநாசித லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

8. ஸுரகுருஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவனபுஷ்ப ஸதார்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்பிரணமாமி ஸதாசிவ லிங்கம்

வரவை அறிந்து செலவு செய்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவபெருமானின் 108 போற்றிகள்.

ஒவ்வொரு போற்றியின் பொழுதும் "ஓம்" என்பதைச் சேர்த்துக் கொள்ளவும்.

1.	ஓம்	அப்பா	போற்றி
2.	"	அரனே	போற்றி
3.	"	அரசே	போற்றி
4.	"	அமுதே	போற்றி
5.	"	அழகே	போற்றி
6.	"	அத்தா	போற்றி
8.	"	அர்ப்புதா	போற்றி
8.	"	அறிவே	போற்றி
9.	"	அம்பலா	போற்றி
10.	"	அரியோய்	போற்றி
11.	"	அருந்தவா	போற்றி
12.	"	அணுவே	போற்றி
13.	"	அண்டா	போற்றி
14.	"	ஆதியே	போற்றி
15.	"	ஆறங்கா	போற்றி
16.	"	ஆரமுதே	போற்றி
17.	"	ஆரணா	போற்றி
18.	"	ஆண்டவா	போற்றி
19.	"	ஆலவாயா	போற்றி
20.	"	ஆரூரா	போற்றி
21.	"	இறைவா	போற்றி
22.	"	இடபா	போற்றி
23.	"	இன்பா	போற்றி
24.	"	ஈசா	போற்றி
25.	"	உடையோய்	போற்றி
26.	"	உணர்வே	போற்றி
27.	ஓம்	உயிரே	போற்றி
28.	"	ஊழியே	போற்றி
29.	"	எண்ணே	போற்றி
30.	"	எழுத்தே	போற்றி
31.	"	எண்குணா	போற்றி
32.	"	எழிலா	போற்றி
33.	"	எளியா	போற்றி
34.	"	ஏகா	போற்றி
35.	"	ஏழிசையே	போற்றி
36.	"	ஏறூர்ந்தா	போற்றி
37.	"	ஐயா	போற்றி
38.	"	ஒன்றே	போற்றி
39.	"	ஒப்பிலா	போற்றி
40.	"	ஒலியே	போற்றி
41.	"	ஒளியே	போற்றி
42.	"	ஓங்காரா	போற்றி
43.	"	கடம்பா	போற்றி
44.	"	கதிரே	போற்றி
45.	"	கதியே	போற்றி
46.	"	கலையே	போற்றி
47.	"	கனியே	போற்றி
48.	"	காருண்யா	போற்றி
49.	"	குரியே	போற்றி
50.	"	குருவே	போற்றி
51.	"	குணமே	போற்றி

ஊருக்கு உழைப்பது யோகம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

52. ஓம் கூத்தா போற்றி
53. " சடையா போற்றி
54. " சங்கரா போற்றி
55. " சதுரா போற்றி
56. " சதாசிவா போற்றி
57. " சிவமே போற்றி
58. " சிரமே போற்றி
59. " சித்தா போற்றி
60. " சீரா போற்றி
61. " சுடரே போற்றி
62. " சுந்தரா போற்றி
63. " செல்வா போற்றி
64. " செங்கணா போற்றி
65. " செம்பொனேபோற்றி
66. " சொல்லே போற்றி
67. " ஞாயிறே போற்றி
68. " ஞாலமே போற்றி
69. " தமிழே போற்றி
70. " தத்துவா போற்றி
71. " தலைவா போற்றி
72. " தந்தையே போற்றி
73. " தாயே போற்றி
74. " தாண்டவா போற்றி
75. " திங்களே போற்றி
76. " திசையே போற்றி
77. " திரிசூலா போற்றி
78. " துணையே போற்றி
79. " தெளிவே போற்றி
80. ஓம் தேவதேவே போற்றி
81. " தோழா போற்றி
82. " நமசிவாய போற்றி
83. " நண்பா போற்றி
84. " நஞ்சுண்டா போற்றி
85. " நான்மறையா போற்றி
86. " நிறைவே போற்றி
87. " நினைவே போற்றி
88. " நீலகண்டா போற்றி
89. " நெறியே போற்றி
90. " பண்ணே போற்றி
91. " பித்தா போற்றி
92. " புனிதா போற்றி
93. " புராணா போற்றி
94. " பெரியோய் போற்றி
95. " பொருளே போற்றி
96. " பொங்கரவா போற்றி
97. " மணியே போற்றி
98. " மதிசூடியே போற்றி
99. " மருந்தே போற்றி
100. " மலையே போற்றி
101. " மஞ்சா போற்றி
102. " மணாளா போற்றி
103. " முகிலே போற்றி
104. " முத்தா போற்றி
105. " முதல்வா போற்றி
106. " மெய்யே போற்றி
107. " வாழ்வே போற்றி
108. ஓம் வைப்பே போற்றி

தெய்வத்தை இகழேல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருஞானசம்பந்தர் அருளிய திருநீற்றுப் பதிகம்

தமக்குத் தீங்கிழைத்த மதுரையை ஆண்ட கூன்பாண்டிய மன்னன் வெப்பு நோயால் வருந்திய பொழுது அந்நோயைக் குணமாக்க திருஞானசம்பந்தர் இப்பதிகத்தைத் ஓதி திருநீறு அளித்து சமணப்படுத்தினார். நாமும் தினந்தோறும் இப்பதிகத்தை ஓதி திருநுறு அணிந்தால் உடல் நோயும், மன நோயும் தீர்ந்து நலம் பெறலாம்.

1. மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

2. வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

3. முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நிறு திருவால வாயான் திருநீறே.

4. காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

5. பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

6. அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நிறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

7. எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திரு நீறே.

8. இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே.

9. மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலஉடம் பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமது உண்ட மிடற்று எம் ஆலவாயான் திருநீறே.

10. குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூட
கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
ஆண்டத்தவர் பணிந் தேத்தும் ஆலவாயான் திரு நீறே.

11. ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திரு நீற்றை
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல்உற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

- திருச்சிற்றம்பலம்

வில்வத்தின் மகிமை

வில்வ மரத்தடியில் லட்சுமி வசிப்பதாக ஐதீகம். வில்வம் வெப்பத்தைக் குறைத்து குளிர்ச்சியைத் தரவல்லது. ஒரு வில்வ இலை பல ஸ்வர்ண புஸ்பங்களுக்கு நிகரானது. வில்வ அர்ச்சனை சகல பாவங்களையும் நீக்கி நன்மை உண்டாக்கக் கூடியது. வில்வம் பறித்து ஆறுமாதங்கள் வைத்திருந்து கூட அர்ச்சனைசெய்யலாம் என்பது வில்வத்திற்குரிய தனிச்சிறப்பாகும். தமிழ் மாதப் பிறப்பு, திங்கட்கிழமை, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அஷடமி, நவமி ஆகிய நாட்களில் வில்வ மரத்தில் இலை பறிக்கக் கூடாது. வில்வ மரம் சிவலிங்கமாகப் பாவிக்கப்படுவதால் மரத்தில் ஏறாமல் ஏணி வைத்து இலை பறிக்க வேண்டும். இலை பெரிதாகவுடைய காசி வில்வம் அர்ச்சனைக்குச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. வில்வமரம் சிவனுக்கு உரியது. அரசமரம் திருமாலுக்குரியது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பில்வாஷ்டகம்

த்ரிதனம் த்ரிகுணாகாரம் த்ரிநேத்ரம் ச த்ரியாயுதம் I
த்ரிஜன்மபாபஸம்ஹாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம் II 1
த்ரிசாகைர்பில்பத்ரைச்ச அச்சித்ரை:கோமலைச்சுபை I
தவ்பூஜாம் கரிஸ்யாமி ஏகபில்வம் சிவார்ப்பணம் II 2
தர்சனம் பில்வவ்ருக்ஷைச்ச ஸ்பர்சனம் பாபநாசனம் I
அகோர பாபஸம்ஹாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம் II 3
ஸாளக்ராமேஷு விப்ரேஷு தடாகே வனகூபயோ: I
யக்ஞகோடி ஸஹஸ்ராணாம் ஏகபில்வம் சிவார்ப்பணம் II 4
தந்தி கோடி ஸஹஸ்ரேஷு அச்வ மேதசதானிச I
கோடிகன்யாப்ரதானேன ஏகபில்வம் சிவார்ப்பணம் II 5
ஏகம்ச பில்வபத்ரைச்ச கோடியக்ஞபலம் லபேத் I
மஹாதேவைச்ச ஜார்த்தம் ஏகபில்வம் சிவார்ப்பணம் II 6
காசிக்ஷேத்ரே நிவாசம்ச காலபைரவதர்சனம் I
கயாப்ரயாகமேத்ருஷ்ட்வா ஏகபில்வம் சிவார்ப்பணம் II 7
உமயா ஸஹ தேவேசம் வாஹனம் நந்திகேச்வரம் I
முச்யதே ஸர்வபாபேப்யோ ஏகபில்வம் சிவார்ப்பணம் II 8
துள்ஸீ பில்வ நிர்குண்டீ அபாமார்க கபித்தகெள I
சீம சாமலகம் தூர்வா அஷ்டபில்வா ப்ரகீர்த்திதா II. 9

ஆறுகால பூஜைகளும் அதன் சிறப்பும்

1. **திருவனந்தல்** : ஆக்கல் தொழிலைக் குறிப்பது. காலை 5 - 6 மணி - உடல் நலமும் மன அமைதியும் தரும்.
2. **விளாப்பூசை** : காத்தல் தொழிலைக் குறிப்பது. காலை 6 - 7 மணி - மன மகிழ்ச்சியும் காரிய சித்தியும் தரும்.
3. **காலசந்தி** : சகல மூர்த்திகளுக்கும் பூஜை. காலை 8 - 9 - வறுமையும் பிணியும் அகலும்.
4. **உச்சி காலம்** : அழித்தல் தொழிலைக் குறிப்பது. பகல் 12 மணிக்கு - செல்வம் பெருகும்.
5. **சாயரட்சை** : மறைத்தல் தொழிலைக் குறிக்கும். மாலை 5 - 6 மணிக்கு (பிரதோஷ வேளை) பக்தி மிகும்.
6. **அர்த்த சாமம்** : அருளல் இரவு 7.30 - 8.30 மணி இல்லற சுகம் பெருகும்.

இறையருளைப் பெற சத்சங்கமும் வழிபாடும் அவசியம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அர்ச்சனைக்குரிய பூக்களும் பச்சிலைகளும்

1. ஸ்ரீ கணபதி : அருகம்புல், வன்னி இலை, வில்வ இலை, எல்லா வகைப் பூக்களம் போடலாம். துளசி மட்டும் போடுதல் கூடாது.
2. சிவபிரானுக்கு : மேற்கண்ட பூக்களும் இலைகளும் போடலாம். தும்பை மலர், பூத்த துளசியும் எருக்கம்பூவும் போடலாம்.
3. அம்பாளுக்கு : சிவனுக்குரிய பூக்களும் இலைகளும் போடலாம். எருக்கம் பூ மட்டும் ஆகாது. வாசமுடைய மலர்கள் அனைத்தும் சிறந்தன.
4. முருகனுக்கு : சிவனுக்குரிய அனைத்து மலர்களும் இலைகளும் போடலாம்.
5. திருமாலுக்கு : துளசி மிகச் சிறப்புடையது.

துளசியின் மகிமை

நம் மூதாதையர்கள் சீவகாருண்யத்தைக் கருத்தில் கொண்டும், மருத்துவப்பயன் கருதியும் மிருகங்களையும், பறவைகளையும், மரம், செடிகளையும் ஒவ்வொரு தெய்வங்களுக்கும் உகந்ததாகக் கருதி வந்துள்ளனர். அதில் துளசி திருமாலுக்கு உகந்ததாகக் கருதப்பட்டு போற்றப்படுகிறது. ஒவ்வொரு பெருமாள் கோவிலிலும் துளசி தீர்த்தம் வழங்கப்படுகிறது. துளசியை மகாலட்சுமியாகக் கருதி ஒவ்வொரு வீட்டிலும் துளசி மாடம் வைத்து துாபதீபம் காட்டி வணங்கப்படுகிறது.

துளசி உடலுக்கு வேண்டிய வெப்பத்தைக் கொடுத்து சிலேத்துமத்தால் ஏற்படும் சளி, இளைப்பு, இருமல் நோய்களைக் குணமாக்குகின்ற மருத்துவ குணமுடையது. துளசியுள்ள இடத்தில் தேள், பூரான், பாம்பு போன்ற நச்சு உயிர்கள் நெருங்காது. தேள் கடித்த இடத்தில் துளசியைக் கசக்கித் தேய்ப்பதுடன் இலைகளை வாயிலிட்டு மென்று தின்பதால் விஷம் இறங்கி வேதனை குறைவதை அனுபவத்தில் காணலாம்.

காலையில் வெறும் வயிற்றில் மூன்று, நான்கு துளசி இலைகளைத் தின்று வந்தால் சளித் தொல்லைகள் வராது. ரத்தசுத்தி ஏற்படுவதுடன் மூளையும் பலப்படும். பெண்களுக்கு

தீராக்கோபம் போராய் முடியும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏற்படும் கர்ப்பாசயக் கோளாறுகள் நீங்குவதுடன் சிறந்த கிருமி நாசினியாகவும் நோய் எதிர்ப்பு சக்தியை உடலுக்கு ஊட்டும் நன்மருந்தாகவும் உள்ளது என்ற உண்மையை மருத்துவ நூல்கள் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

சாதாரண துளசி, கருந்துளசி, செந்துளசி என்ற மூன்று வகைத் துளசிகளில் கருந்துளசி சற்று காரத்தன்மை கொண்டதாகும். இது விஷ்ணு துளசி என்றும், கிருஷ்ண துளசி என்றும் அழைக்கப்பட்டு வீடுகளில் துளசி மாடங்களில் வளர்க்கப்படுகிறது.

1. அம்பிகை துதி

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்.
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பம் இல்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே.
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாய் நீ அபிராமியே! (2)

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியாய் நின்ற உமையே
சுக்கிர வாரத்திலுனை கண்டு தரிசிப்போர்
துன்பத்தை நீக்கி விடுவாய்
சிந்தைதனில் உன்பாதம் தன்னையே தொழுபவர்கள்
துயரத்தை மாற்றி விடுவாய்
ஜெகமெலா முன்மாய்கை புகழ என்னால் ஆமோ
சிறியனால் முடிந்திடாது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சொந்தஉன் மைந்தனாய் இரட்சிக்கச்
சிறியகடன் உன்னதம்மா
சிவசிவ மகேஸ்வரி பரமனிட ஈஸ்வரி
சிரோன்மணி மனோன்மணியும் நீ
அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரி
அனாத ரட்சகியும் நீயே
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி உமையே. (3)

நாமாவளி

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்

தீனதயாபரி பூர்ணகடாக்ஷி திரிபுரசுந்தரி தேவி மீனாட்சி
காஞ்சியில் வாழும் காமாட்சி கருணையே புரிவாய் காமாட்சி
தீனதயாபரி பூர்ணகடாக்ஷி திரிபுரசுந்தரி தேவி மீனாட்சி
காசியின் சத்யவிசாலாட்சி காப்பாய் நாளும் ஸ்ரீ சக்தி

2. அபிராமி அந்தாதி

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வரர்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயுமென் புந்தி எந்நாளும் பொருந்துகவே

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குள் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதமென் சென்னியதே!

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

ஆத்தாளை எங்கள் அபிராம வள்ளியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவி யடங்கக்
காத்தாளை அங்கையிற் பாசாங்குசமும் கரும்பும் வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்
கொருதீங்கில்லையே!

- அபிராமிபட்டர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

போற்றி

எழும்போதும் வேலுமயிலு மென்பேன் எழுந்தே மகிழ்ந்து
தொழும்போதும் வேலுமயிலு மென்பேன் தொழுதே யுருகி
அழும்போதும் வேலுமயிலு மென்பேன் அடியேனுடலம்
விழும்போதும் வேலுமயிலு மென்பேன் செந்தில் வேலவனே!

- பாம்பன் சுவாமிகள்

வான்மழை வளாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவ வேள்விமல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

வையகம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே!

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த
திருத்தொண்டத் தொகை

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரி பொழில்சூழ் குன்றையார் விறன் மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (1)

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கம் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கம் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே. (2)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே. (3)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கம் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலி புனல் சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க்கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே. (4)

வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற்பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே. (5)

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க்கு அடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற்றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே. (6)

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் அடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க்கடியேன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கை தடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே (7)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவள இருளகற்றுஞ்சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (8)

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடை சூழ்ந்த புலியதன்மேல் அரவாட ஆடிப்
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த் துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (9)

பத்தராய்ப் பணிவார்கள் எல்லோர்க்கும் அடியேன்-
பரமனையே பாடுவோர் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (10)

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக் கன்பரா வாரே. (11)

திருச்சிற்றம்பலம்.

பொருள் தேடு. பேராசைப்படாதே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குமரகுருபர சுவாமிகள் அருளிய
சகலகலாவல்லி மாலை

(படிக்கின்ற மாணவர்கள் அனைவரும் அதிக மதிப்பெண் பெற்றுத் தேரிட தினம் படிக்கவேண்டிய பாடல்)

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்களன் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ சகமேழுமளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே!

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய் பங்கயாசனத்திற்
கூடும்பசும்பொற் கொடியே கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும்சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே!

3. அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே!

4. தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வடநூற் கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ் செல்வமும் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே!

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகம்என்
நெஞ்சத் தடத்து அலராததென்னே நெடுந் தாட்கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோள் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே!

ஞயம் பட உரை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

6. பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளி தெய்த நல்காய் எழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே!

7. பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய் உளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பாலமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகலகலாவல்லியே!

8. சொல்விற் பனமும் அவதானமுங் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகாலமுஞ் சிதையாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே!

9. சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார் நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகல கலாவல்லியே!

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட டளவில் பணியச் செய்வாய் படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டெனும் விளம்பிலுன் போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே!

"ங" போல் வளை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரதோஷ வேளையில் செய்ய வேண்டிய பிரார்த்தனை

எல்லாம் வல்ல எம்பெருமானே! தேவரீர் !
நாங்கள் இந்தப் பிரதோஷ வேளையில் இந்த ஆலயத்தில் கூடி உம்மை வணங்கும் பெரும் புண்ணியத்தைப் பெற்றுள்ளோம். அதற்காக உம் திருவடிகளை கரம்கூப்பி சிரம்தாழ்த்தி வணங்குகிறோம்.

பிறவிப் பிணியறுக்கும் பிரதோஷ நாயகா!
தேவர்களின் பாவங்களைப் போக்கி குற்றங்களை மன்னித்ததுபோல நாங்கள் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகலபாவங்களையும் குற்றங்களையும் மன்னித்துக் காத்தருள வேண்டுகிறோம்.

எந்நாட்டவர்க்கும் இறையாகிய தென்னாடுடைய சிவனே!
நாடெங்கும் நல்லமழை பெய்து நாடு செழிக்கவும் நல்லாட்சி நடைபெறவும், உலகில் அமைதி நிலைக்கவும், வறுமையும், பிணியும், பகையும்

பயமும், வாராது ஒழிந்து எல்லா உயிர்களும்
இன்புற்றிருக்கவும் நீரே அருள்புரிவீராக! இயற்கைச் சீற்றங்கள் எங்களை வருத்தா வண்ணம் காத்தருள வேண்டுகிறோம். சாதிச் சண்டைகளும் சமயப்பிணக்குகளும் எங்களுள் ஏற்படாதவாறு எங்கள் உள்ளத்தில் அன்பும் அருளும் பெருகி மனித நேயம் வளர உம்மைப் பிரார்த்திக்கிறோம்.

ஆராவமுதான அன்பின் உருவே!
எங்களுக்கு நல்ல பிள்ளைச் செல்வத்தையும், பிள்ளை களுக்கு நல்ல கல்விச் செல்வத்தையும், வேலை வாய்ப்பினையும், திருமண வாழ்வையும் தந்து எங்கள் குலம் தழைக்க, வளம் கொழிக்க அருள்வீராக!

கருணைக் கடலே! கற்பகத்தருவே!
எங்கள் எல்லோர்க்கும் நீண்ட ஆயுளையும் நிறைந்த செல்வத்தையும் பூரண சுகத்தையும் மனஅமைதியையும் மங்களகரமான வாழ்வையும் தந்து காத்தருளப் பிரார்த்திக்கிறோம். ஈசனே!

கண்டு ஒன்று சொல்லேல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பிரதோஷ மங்களப் பாடல்

மங்களம் மங்களம் மங்களமாம் மங்களம்
மங்களம் மங்களம் மங்களமாம் மங்களம்

அருட்பெருஞ் சோதியான ஆண்டவர்க்கு மங்களம்
ஆதிசக்தி நாயகியாம் அம்பிகைக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் ஈசனுக்கு மங்களம்
ஈசனின் இடம் உறையும் ஈஸ்வரிக்கு மங்களம்

உலகமுய்யக் காட்சிதரும் உத்தமர்க்கு மங்களம்
ஊனமில்லா வாழ்வளிக்கும் உத்தமிக்கு மங்களம்
எவ்வுயிர்க்கும் அத்தனான ஈசனுக்கு மங்களம்
ஏற்றமெலாம் தந்தருளும் ஈஸ்வரிக்கு மங்களம்
ஐங்கரனின் தந்தையான சங்கரர்க்கு மங்களம்

ஆறுமுக வேலவனின் அன்னையார்க்கு மங்களம்
வந்திறை அடியிற்தாழும் நந்தியர்க்கு மங்களம்
சந்ததம் கொண்டாடுகின்ற சகலருக்கும் மங்களம்

பந்தளமாய் பாடஇங்கு வந்தவர்க்கு மங்களம்
பக்தியோடு பூஜை செய்யும் பட்டருக்கு மங்களம்
சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரி மணங்கவரும் சங்கரர்க்கு மங்களம்

பிரதோஷ பூஜைசெய்து பாரெலாம் செழிக்கவும்
மாறாத இன்பம் பொங்கி மனையெலாம் விளங்கவும்
சிவசக்தி போற்றியென்று சிந்தைமகிழ்ந் தாடுவோம்
தேசம்செழிக்கவென்று சேர்ந்துநாமும் பாடுவோம்.

மங்களம் மங்களம் மங்களமாம் மங்களம்
மங்களம் மங்களம் மங்களமாம் மங்களம்

ஔவியம் பேசேல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடலூர் வள்ளல் இராமலிங்க சுவாமிகள் அருளிய திருவருட்பா

1. அருட்ஜோதித் தெய்வஎனை யாண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே யாடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகளெல்லாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி யீந்தருளுந் தெய்வம்
எண்ணியநா னெண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்

2. தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிக ரில்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம்
காயாது கனியாகிக் கலந்தினிக்கும் தெய்வம்
கருணைநிதித் தெய்வமுற்றுங் காட்டுகின்ற தெய்வம்
சேயாக யெனைவளர்க்கும் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்

3. தூண்டாத மணிவிளக்காய்த் துலங்குகின்ற தெய்வம்
துரியதெய்வ மரியதெய்வம் பெரிய பெருந்தெய்வம்
மாண்டாரை யெழுப்புகின்ற மருந்தான தெய்வம்
மாணிக்க வல்லியையோர் வலத்தில்வைத்த தெய்வம்
ஆண்டாரை யாண்டதெய்வம் அருட்சோதித் தெய்வம்
ஆகமவே தாதியெலா மறிவரிதாந் தெய்வம்
தீண்டாத வெளியில்வளர் தீண்டாத தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்

ஓதுவது ஒழியேல்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

4. அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினு நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவன.

5. அமலா நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆடிநிற்கும் சேவடியைப் பாடிநிற்க வேண்டும்
எமனாதித் தடை என்றும் எய்தாமை வேண்டும்
எல்லாம் செய் வல்லதிறன் எனக்களித்தல் வேண்டும்
கமையாதி அடைந்துயிர்கள் எல்லாம்சன் மார்க்கம்
காதலித்தே திருப்பொதுவைக் களித்தேத்தல் வேண்டும்
விமலாதி உடையஒரு திருவடியில்யானும்
விமலா நீயுங்கலந்தே விளங்குதல் வேண்டுவனே!

6. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லாக்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நட மிடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலு மிசையுமணிந்தருளே.

ஒப்புரவு ஒழுகு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவ நாமாவளி

ஓம் நம: ஸிவாய பரமேஸ்வராய
சசிசேகராய நம ஓம்!
பவாய குண ஸம்பவாய
சிவ தாண்டவாய நம ஓம்!

அபிஷேக பலன்

1.	தைலம் (நல்லெண்ணெய்)	–	பக்தி மிகும்.
2.	மஞ்சள்	–	மங்களம் உண்டாகும்.
3.	நெல்லிமுள்ளிப்பொடி	–	நோய் நீங்கும்.
4.	மாவுப் பொடி	–	குபேர சம்பத்தைத் தரும்.
5.	பஞ்சாமிர்தம்	–	நீண்ட ஆயுளைத் தரும்.
6.	பால்	–	மன அமைதியைத் தரும்.
7.	தயிர்	–	உடல் நலம் தரும்.
8.	கரும்புச் சாறு	–	ஞானமுண்டாகும்.
9.	தேன்	–	இனிய வாழ்வு தரும்.
10.	பழச்சாறு	–	நேசத்தைப் பெருக்கும்.
11.	நெய்	–	சுக வாழ்வு தரும்.
12.	பன்னீர்	–	புகழ் உண்டாகும்.
13.	அன்னம்	–	அரச வாழ்வு தரும்.
14.	இளநீர்	–	நன்மக்கட்பேறு.
15.	பஞ்சகவ்யம்	–	பாவ நிவர்த்தி.
16.	விபூதி	–	புண்ணியமுண்டாகும்.
17.	சந்தனம்	–	சொர்க்க போகம்.
18.	திரவியப்பொடி	–	மாங்கல்யதோஷம் நீங்கும்.

பஞ்சாமிர்தம் : நெய், தேன், சர்க்கரை, கற்கண்டு, பழம்.

பஞ்ச கவ்யம் : பால், தயிர், நெய், பசுவின் சாணம், பசுவின் நீர் இவைகளின் கலவை.

இல்லறத்தில் இரு. காமவெறி கொள்ளாதே.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருள்மிகு நடராசர் பதிகம்

ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய ஓம் ஓம் நமசிவாய

அங்கும் இங்கும் எங்குமாய் அமைந்த தேவ தேவனே
ஆதியாய் அநாதியாய்ச் சமைந்த சோதி ரூபனே!
மங்கலங்கள் யாவும் நல்கும் அம்பிகை மணாளனே
மைந்தன் செய்யும் பூசையில் மகிழ்ந்தருள் நடேசனே!
- ஓம்

எந்த இல்லம் ஆயினும் இருந்த இல் சிதம்பரம்
எடுத்த பீடம் ஆலயம் தொடுத்த கூரை கோபுரம்!
செந்தமிழ் சொல் மந்திரம் திருந்தும் அன்பே ஆகமம்
சிவந்தபாத பங்கஜம் உவந்தருள் நடேசனே! - ஓம்

மன்றிலே எடுத்தகால் என் மனையிலும் எடுத்துவை
மனதிலே நினைத்த நன்மை விரைவிலே முடித்துவை
என்றும் தீமை அணுகிடாமல் ஈசனே தடுத்துவை
ஏத்தும் அன்பர்குழுவில் என்னைச் சேர்த்துவை நடேசனே
- ஓம்

ஆபயந்த ஐந்தினோடு பால் பழம் பஞ்சாமிர்தம்
ஆலைவாய்க் கரும்பு, தெங்கு தேன் சுகந்த சந்தனம்
நீ பயந்த யாவையும் நினக்களித்தேன் ஈசனே
நேர்த்தியாய் அனைத்தும் ஆடி வாழ்த்துவாய் நடேசனே
- ஓம்

அட்டநாக பூஷணம் அளிக்க வல்லன் அய்யனே
ஆனை, மான், சிறுத்தை வேட்டை ஆட வல்லன் அய்யனே
இட்ட மாலை ஆடையோடு தொட்டுவைத்த சந்தனம்
என்றும் நல்க வல்லன்யான் கொண்டருள் நடேசனே - ஓம்

வில்லினால் அடிக்கவோ? வீசுகல் பொறுக்கவோ?
மிதித்த பாதுகை பிரம்பை மேலும் நான் எடுக்கவோ?
நல்ல பிள்ளை என்னை ஆளும் நாதனும் நீ அல்லவோ?
நாளும் நான் படைத்த சொல்லும் பூவும் கொள் நடேசனே
- ஓம்

ஆட நீ எடுத்தகால் என் றறிந்தவர் இயம்புவார்
அல்ல அல்ல என் தலைமேல் சூட என்று சொல்கிறேன்
ஈடில்லாத தெய்வம் நீ இடப்புறம் எடுத்த கால்
எந்த நோக்கில் என்று சொல்ல வந்தருள் நடேசனே! - ஓம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மழுவெடுத்து எதை விளக்க மன்று தோறும் ஓடினாய்?
மதியெடுத்த சிரம் இருக்க மத்தனாய் ஏன் ஆடினாய்?
கழுதெடுத்த நடனம் ஆடும் காட்டில் என்ன தேடினாய்?
கையில் நான் எடுத்த தூபம் கொள்ளுவாய் நடேசனே! - ஓம்

எடுத்த தூபம் ஆதியாவும் ஏற்றருள் மகேசனே!
இன்று நான் படைத்த யாவும் உண்ணுவாய் சபேசனே
தடுத்த பண்டை வினைகளாற்றித் தாங்குவாய் சர்வேசனே
சரணம் உன்னையன்றி ஏது? தாங்குவாய் நடேசனே! - ஓம்

வாழி நீ படைக்கும் தெய்வம் மலரணை அமர்ந்ததாம்
வகுத்தளிக்கும் தெய்வம் கூட அரவணை கிடந்ததாம்
ஊழிதோறும் ஐந்தொழில் உவந்து செய்யும் ஈசனே!
ஓய்ந்து சற்றென் நெஞ்சணைக் கண் சாய்ந்து கொள் நடேசனே
- ஓம்

ஓம் நமச்சிவாய ஓம் நமச்சிவாய நாமரூபனே
ஓதும் ஐந்து சபையில் ஆடும் பாதனே சங்கீதனே
வாழியாய்த் தலைத்த சிவகாமி காதல் நேசனே
மாறிடாத கருணை நீ வழங்குவாய் நடேசனே - ஓம்

அருட்கவி கு.செ. ராமசாமி

கீதாசாரம்

மோகத்தில் மூழ்கி விடாதே! பாசத்தால் கட்டுண்டு
பரிதவிக்காதே! பணத்தின் மேல் பேராசை கொள்ளாதே!
இவை உன்னால் முடியாவிட்டால் என்
திருவடிகளைப் பற்றிக் கொள். அத் : 18 - சு : 700

குடும்பத்தோடு நீ ஒட்டும் உறவும் வைப்பதால் தான் உனக்கு பயமுண்டாகிறது. அந்தப் பயத்திலிருந்து விடுபட என்னோடும் உறவை வைத்துக் கொள்.

யோகம், யாகம், ஞானம்

ஊருக்குழைத்திடல் யோகம் - நலம் ஓங்கிடுமாறு வருந்துதல்
யாகம் போருக்கு நின்றிடும் போதும் - உளம் பொங்கல்
இலாத அமைதி மெஞ்ஞானம் - *மகாகவி பாரதியார்* -

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

இளங்கோவடிகள் அருளிய

சிலப்பதிகார அறவுரை

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றன்மின்
ஊன் ஊண்துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் இங்கென்.

சிட்டி கம்யூட்டர் பிரிண்டர்ஸ், கீழக்கரை.
☎ : 242415

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கீதாச்சாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையது எதை இழந்தாய்?

எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்ப

எதை நீ படைத்திருந்தாய் அது வீணாகு

எதை நீ எடுத்துக்கொண்டாயோ

Center for Shaiva Studies, Pondicherry Collection